E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஓகஸ்ட் 19 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 196 | Saturday 19, August, 2023 | 11 பக்கங்கள் | 50/-

## GSP + இழக்க நேரிடின் நாடு பின்னடைவை சந்திக்கும்

### இலங்கைக்கான EU பிரதிநிதி தெரிவிப்பு



இலங்கை ஜி.எஸ். பி. பிளஸ் வரிச்சலுகையை இழந்தால், அதன் பிராந்திய நாடுகளை விட பொருளாதாரத்தில் பின்னடைவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுமென, இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்

06

## பொலிஸ் அதிகாரம் மத்திய அரசிடம் மட்டுமே இருக்க வேண்டும்

### ஜனாதிபதிக்கு அமைச்சர் நஸீர் அஹமட் கடிதம்



முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களின் பங்கேற்பின்றி 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவதன் மூலமோ அல்லது வேறு நடவடிக்கை மூலமோ கொண்டு வரப்படும் எந்தத் தீர்வும் ஒருபோதுமே நீடித்த நிலைபேறான தீர்வாக அமையாதென, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அத்துடன் பொலிஸ் அதிகாரங்கள், மத்திய அரசாங்கத்திடம் மாத்திரமே இருக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சர் நஸீர் அஹமட், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகாரம்

06

## உள்ளூராட்சி சபைகளில் 25 வீத இளைஞர்களின் பிரதிநிதித்துவம்

### உறுதிப்படுத்தும் சட்டமூலம் அடுத்த பாராளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்க ஏற்பாடு



உள்ளூராட்சிமன்றங்களில் 25 வீதம் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த தெரிவித்தார்.

இலங்கையில் நீண்டகாலமாக இருந்துவந்த ஆனால், கடந்த காலத்தில் இழந்த அந்த வாய்ப்பை மீண்டும் இளைஞர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகுமெனவும் அதற்காக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு பெறப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (18) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டு இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்குவதும்

06

## IMF இன் இரண்டாம் கட்ட 333 மில். டொலர் விரைவில்

### கிடைத்ததும் மக்களது வாழ்க்கை செலவு குறையும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள கடனின் இரண்டாவது தவணை விரைவில் நாட்டுக்கு கிடைக்குமென்பதுடன், அந்த வகையில் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி இரண்டாம் தவணையாக கிடைக்கவுள்ளதாகவும், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட தவணை நாட்டுக்கு கிடைப்பதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு நாட்டின் எதிர்கால பொருளாதாரம் தொடர்பாக சிறந்த செய்தியை வழங்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"ஊழல் ஒழிப்பு, நிதி தொடர்பான வினைத்திறனை முன்னெடுத்து

06

## உள்ளூராட்சிசபை, மாகாணசபை, மத்திய அரசாங்கம்

# 03 பிரிவுகளின் சேவைகளும் ஒரே பொறிமுறையின் கீழ்

### தயாரிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**மாகாணசபைகளின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து ஆராய மாகாண ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களை ஜனாதிபதி சந்தித்து உரையாடினார்**

உள்ளூராட்சிசபை, மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் சேவைகள் வழங்குவதில் ஏற்படும் பண விரயத்தை தவிர்க்க, இந்த மூன்று பொறிமுறைகளின் செயற்பாடுகளை மையப்படுத்தி, புதிய பொறிமுறையொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனும் பிரதம செயலாளர்களுடனும் கலந்தாலோசித்து, ஒரு மாத காலத்துக்குள் இது தொடர்பான அறிக்கையை

06



**மாகாண நிர்வாக செயற்பாடுகளில் இணைய MP க்களுக்கும் வாய்ப்பு**

#### வியட்நாமுக்கும் இலங்கைக்கும் இடையே

## பொருளாதார ஒத்துழைப்புகளை விரிவுபடுத்த துரித நடவடிக்கை

### வியட்நாம் துணை ஜனாதிபதியுடனான சந்திப்பில் பிரதமர் தினேஷ் இணக்கம்



ஏழாவது சீன தெற்காசிய கண்காட்சியில் பங்கேற்பதற்காக சீனாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் வியட்நாம் நாட்டின் துணை ஜனாதிபதி ட்ரான் லு குவாங்கிக்கும் இடையே சீனாவில் இருதரப்பு சந்திப்பொன்று நடைபெற்றது.

அரச மற்றும் தனியார் துறைகளில் தற்போதுள்ள கூட்டு முயற்சிகளுக்கு மேலதிகமாக புதிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு துறைகளை ஆராயுமாறு பிரதமர் முன்வைத்த கோரிக்கைக்கு வியட்நாம் துணை ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

வியட்நாம் நாட்டின் முதலீடுகளின் மூலம் பாரிய அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக தொழில் வல்லுநர்கள் மற்றும் திறமையான இலங்கை பணியாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுமென்று பிரதமர் சுட்டிக்காட்டினார். தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் மீன்பிடி, மாற்று எரிசக்தி மற்றும்

06



மின்சாரம், பெற்றோலியம், வைத்தியசாலை;

**அத்தியாவசிய சேவைகளான முக்கிய மூன்று துறைகள்**

ஜனாதிபதியின் செயலாளரால் விசேட வர்த்தமானி

03

#### பொலிஸ், STF இன் பாதுகாப்புக்கு மத்தியில்

## நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய குருந்தூர்மலையில் விசேட பொங்கல்



**மாங்குளம் குறூப், ஓமந்தை விசேட நிருபர்கள்**

முல்லைத்தீவு, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பொங்கல் வழிபாடுகள் நேற்று (18) நீதிமன்ற உத்தரவுக்கமைய பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை, குருந்தி விகாரையில் பௌத்த மக்களும் சிறப்பு வழிபாடுகளை நேற்று மேற்கொண்டனர்.

பொங்கல் வழிபாட்டுக்கு குமுழமுனை, தண்ணிமுறிப்பு வீதியால் சென்ற மக்கள் பொலிஸாரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பொங்கல் நிகழ்வுகளை முன்னிட்டு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

06

**விகாரையிலும் பௌத்தர்கள் விசேட வழிபாடு**

## போலி நிதி ஆவணங்கள் மூலமாக வெளிநாட்டு வீஸா

### பாரிய மோசடி குறித்து மத்திய வங்கி எச்சரிப்பு




நாட்டின் சில நிறுவனங்களும் தனிநபர்களும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான போலி ஆவணங்களை தயாரித்து பல்வேறு திணைக்களங்களுக்கு சமர்ப்பித்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிய திணைக்களம் தெரிவித்தது.


வீஸா பெற, நிரந்தர வேலை அல்லது பணி அனுபவத்தை உறுதிப்படுத்த, வெளிநாட்டு வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் போது, பல்வேறு அரசு, அரை அரசு மற்றும் சட்ட ரீதியான கொள்முதல் நடைமுறைகளுக்கு விண்ணப்பிக்கும் போது, பணி அனுபவம் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை போன்ற

06

## இடமாற்றங்களை பின்பற்றாத ஆசிரியர்களுக்கு சம்பளம் இல்லை

### நிறுத்தப்படுமென கல்வியமைச்சு எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இடமாற்றங்கள் வழங்கப்பட்டு, இடம் மாறிச் செல்லாதுள்ள ஆசிரியர்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான உத்தரவை பின்பற்றாத ஆசிரியர்களுக்கான சம்பளம் நிறுத்தப்படுமென, கல்வியமைச்சு தெரிவித்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை கவனத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், கல்வியமைச்சு தெரிவித்தது.

இடமாற்ற உத்தரவுக்கேற்ப செயற்படுமாறு பல தடவைகள் அவ்வாறான ஆசிரியர்களுக்கு கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவ்வாறு செயற்படாதவர்களின் சம்பளம் இடை நிறுத்தப்படுமெனவும், கல்வியமைச்சு தெரிவித்தது.

06

## ஹோமாகமவில் திடீர் தீ விபத்து 02 தொழிற்சாலைகள் எரிந்து நாசம்

### இரசாயன தொழிற்சாலை சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதியின்றி இயங்கியதாக தெரிவிப்பு

### விசாரணை நடத்த விசேட குழு நியமனம்






ஹோமாகம, கட்டுவன பிரதேசத்தின் கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள பெயின்ட் தொழிற்சாலையொன்றிலும்

06

## 02Kg கொக்கேய்னுடன் வெளிநாட்டு பிரஜை கைது!

### நாரஹேன்பிட்டியில் பொலிஸார் அதிரடி



கொழும்பு, நாரஹேன்பிட்டி பகுதியில் விடுதியொன்றில் கொக்கேய்ன் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி, சுங்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, முதலில் 2 கிலோ 294 கிராம் கொக்கேய்னுடன் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த நபர் கைது

06

## வெள்ளவத்தை பகுதி இருளில் மூழ்கியது

### WA சில்வா மாவத்தையில் மின்கம்பி பாதிப்பு




கொழும்பு, வெள்ளவத்தையின் டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை பகுதியில் மின்சாரக் கம்பியொன்று சேதமடைந்ததையடுத்து, வெள்ளவத்தையின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது.

பல பிரதேசங்களுக்கு

06

## SLFP இன் இரண்டாவது வருட பூர்த்தி கொழும்பில்!

### அங்கத்தவர்களுக்கு மைத்திரி அறிவிப்பு



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 72ஆவது வருட பூர்த்தியை கொழும்பில் நடத்த அக்கட்சி தீர்மானித்துள்ளது. இந்நிகழ்வை குருநாகல், பண்டுவஸ்நுவரவில் அடுத்த மாதம் 2ஆம் திகதி நடத்தவும் கட்சி திட்டமிட்டிருந்தது.

06

## 56 வயது பெண்மணியின் ஆச்சரியமூட்டும் சாதனை

### யாழில் ஒரு மைல் கடல் தூரத்தை நீந்திக் கடந்து சாதனை

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தில் 56 வயதுடைய பெண்ணொருவர், நீச்சல் போட்டியில் ஒரு கடல் மைல் தூரத்தை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

06



**இனத்தை காட்டிக்கொடுப்போர் குருந்தூர்மலை குறித்து கதை!**

கதைக்க அருகதையற்றவர்கள் என கஜேந்திரன் MP சாடல்

03



மின் உற்பத்தி நிலையங்களுக்கான

**நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு குறைந்தது**

03

# சர்வதேச செய்திகள்

## டிரம்புக்கு விசக் கடிதம் அனுப்பிய பெண்ணுக்கு 22 ஆண்டுகள் சிறை



டொனால்ட் டிரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்கு விசம் தடவிய கடிதங்களை அனுப்பியதற்காக அமெரிக்காவில் கனடா நாட்டு பெண் ஒருவருக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் உயிரியல் ஆயுதங்கள் குற்றச்சாட்டில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட 56 வயதான பஸ்கல் பரிரி என்ற அந்தப் பெண் தண்டனையை ஒப்புக்கொண்டுள்ளார்.

டிரம்பின் பெயருக்கு அனுப்பப்பட்ட உயிராபத்துக் கொண்ட அந்த கடித உறை வெள்ளை மாளிகைக்குச் செல்லும் முன் தடுக்கப்பட்டது.

தனது திட்டம் தோல்வி அடைந்ததற்கு வருந்துவதாகவும் தன்னால் டிரம்பை தடுக்க முடியாமல்போனது என்று பரிரி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். தான் பயங்கரவாதி இல்லை என்றும் செயற்பாட்டாளர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தலில் இருந்து டிரம்பை விலகும்படி வலியுறுத்திய அந்தக் கடிதத்தில் உள்ள கைரேகையை எப்.பி.ஐ புலனாய்வு பிரிவினர் கண்டறிந்தனர்.

'நான் உங்களுக்கு புதிய பெயர் ஒன்றை வைத்திருக்கிறேன் அது 'அசிங்கமான கொடுங்கோள் கோமாளி' என்று அந்தக் கடிதத்தில் அவர் எழுதி இருந்ததாக எப்.பி.ஐ யின் குற்றப் பதிவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பரிரிக்கு மாவட்ட நீதிபதி டப்னி பிரிட்ரிச், 22 ஆண்டுகளுக்கு இணையாக 262 மாத சிறைத் தண்டனையை விதித்தார். தண்டனையை பூர்த்தி செய்த பின் அவர் அமெரிக்காவில் இருந்து நாடுகடத்தப்படுவதோடு அவர் மீண்டும் திரும்பி வந்தால் கண்காணிப்புக்கு முகம் கொடுப்பார் என்று அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நஞ்சு தடவிய கடிதங்களை டெக்சாஸில் எட்டு சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு அனுப்பியதையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

## மலேசியாவில் விமானம் வீதியில் விழுந்து பத்து பேர் உயிரிழப்பு



மலேசிய தலைநகர் கோலாலம்பூரின் புறநகர் பகுதியில் உள்ள நெடுஞ்சாலை ஒன்றில் சிறிய தனியார் விமானம் ஒன்று மோதிய விபத்தில் பத்து போர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை (17) இடம்பெற்ற இந்த விபத்தில் விமானத்தில் இருந்த எட்டுப் பேரும் விமான மோட்டார் சைக்கிள் மற்றும் கார் ஒன்றில் மோதியில் தரையில் இருந்த இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். அந்த விமானம் தரையிறங்க முயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விமானம் வடக்கு தீவான லங்காவியில் இருந்து கோலாலம்பூருக்கு அருகில் இருக்கும் சுல்தான் அப்துல் அசீஸ் ஷா விமானநிலையத்திற்கு பயணித்துக்கொண்டிருந்ததாக மலேஷிய சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விமானம் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அதன் பயணப்பாதை விலகி தரையில் விழுந்திருப்பதாக போக்குவரத்து அமைச்சர் அன்தனி லுகே தெரிவித்துள்ளார்.

விமானத்தின் முன் பாகம் நேராக தரையில் மோதி பெரும் தீப்பிழம்பு எழுந்ததாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டிஉள்நாட்டுசெய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

உயிரிழந்த அனைவரின் உடல்களும் மீட்கப்பட்டுவிட்டன. அவர்களை அடையாளம் காண உடற்கூறுப் பரிசோதனை நடத்தப்படும் என்று அதிகாரிகள் கூறினர்.

இந்த விமானத்தில் மாநில சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் இருந்துள்ளார். மலேசியாவில் அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்கள் நாட்டுக்குள் பயணங்களை மேற்கொள்வதற்கு தனியார் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை பயன்படுத்துவது வழக்கமாகும். இந்த விபத்து நிகழ்ந்த இடத்திற்கு அருகில் 1977 செப்டெம்பரில் சிங்கப்பூரை நோக்கிச் சென்ற ஜப்பான் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 34 பேர் கொல்லப்பட்டதோடு 45 பேர் உயிர்தப்பினர்.

## பாக். இடைக்கால அரசு பொறுப்பேற்பு



பாகிஸ்தான் பிரதமர் அன்வாருல் ஹக் காக்கர் தலைமையிலான இடைக்கால அமைச்சரவை பொறுப்பேற்றுள்ளது.

பாகிஸ்தானின் மத்திய வங்கி முன்னாள் தலைவர் ஷம்ஷட் அக்தார் நிதியமைச்சராகவும் அமெரிக்காவுக்கான முன்னாள் தூதர் ஜலில் அப்பாஸ் ஜிலானி வெளியுறவு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்துறை, தகவல், மனித உரிமை உள்ளிட்ட துறைகளுக்கான அமைச்சர்களையும் பிரதமர் காக்கர் நியமித்துள்ளார். அவர் இந்த வாரம்தான் பாகிஸ்தான் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இடைக்கால அரசாங்கம் தேர்தல் நடைமுறைகளை மேற்பார்வையிடும்.

புதிய தொகுதிகள் குறித்து டிசம்பர் நடுப்பகுதியில்தான் உறுதி செய்ய முடியும் என்றும் அதன் பின்னரே வாக்களிப்பு நாள் குறித்து அறிவிக்கப்படும் என்றும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

## மொஸ்கோ கட்டடத்தின் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்



உக்ரைனிய ஆளில்லா ட்ரோன் விமானம் ஒன்று ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள கட்டடம் ஒன்றில் மோதியதில் அதனால் ஏற்பட்ட வெடிப்புச் சத்தம் வர்த்தக மாவட்டம் முழுவதும் கேட்டதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் அந்த ஆளில்லா விமானத்தை வான் பாதுகாப்பு அமைப்பு சுட்டு வீழ்த்தியதாகவும் அதன் பாகங்கள் நகரில் எக்ஸ்போ சென்ட்ரல் கட்டடத்தில் விழுந்ததாகவும் நகர மேயர் செர்கெய் சபியானின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தலைநகர் மீது இடம்பெறும் தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மொஸ்கோவின் இரவு வானில் அடர்த்தியான சாம்பல் புகை வெளிவருவதை சமூக ஊடகத்தில் பரவிய உறுதி செய்யப்படாத வீடியோ ஒன்று காட்டுகிறது. இது தொடர்பில் உக்ரைன் உடன் எந்த பதிலும் அளிக்கவில்லை.

உள்ளூர் நேரப்படி நேற்று (18) அதிகாலை 4 மணி அளவிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு டெலிகிராமில் தெரிவித்துள்ளது.

நகரில் வான் பாதுகாப்பு அமைப்பை செயற்படுத்தியதை அடுத்து ஆளில்லா விமானம் தனது பயணப் பாதையை மாற்றி மொஸ்கோவில் கணிசமான அரச கட்டடங்கள் இருக்கும் குடியிருப்பாளர்கள் இல்லாத கட்டடம் ஒன்றில் விழுந்ததாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கட்டடத்திற்கு குறிப்பிடத்தக்க எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவை நோக்கி போர் வருவதாகவும் அந்த நாட்டின் அடையாள மையங்கள் மற்றும் இராணுவத் தளங்கள் தற்போது உக்ரைனின் இலக்காக உள்ளன என்றும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி கடந்த மாதம் எச்சரித்திருந்தார்.

புயல், வெள்ளத்தால்:

## ஜெர்மனியில் விமான சேவைகள் பாதிப்பு



ஜெர்மனியில் பிராங்பர்ட் விமான நிலையத்தில் புயல், வெள்ளத்தால் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

10க்கும் மேற்பட்ட விமானச் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன அல்லது தாமதமடைந்தன. பிராங்பர்ட்டில் தரையிறங்கவிருந்த 23 விமானச் சேவைகள் வேறு இடங்களுக்குத் திருப்பிவிடப்பட்டன.

கடந்த புதனன்று (16) ஜெர்மனியின் தென்மேற்குப் பகுதியில் புயல் வீசியது. விமான நிலையத்தின் ஓடுபாதை வெள்ளத்தில் மூழ்கியது.

சுமார் 2 மணி நேரம் வழக்கமான செயல்பாடுகள் நிலைகுலைந்து போயின.

புறப்பாட்டுப் பகுதியில் பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். சிலர் தரையில் உறங்கினர். விமான நிறுவனங்களிடமிருந்து உரிய ஆதரவும் வழிகாட்டலும் கிடைக்கவில்லை என்று பலரும் குறை கூறினர்.

## வட கொரியாவில் பட்டினி அதிகரிப்பு



வட கொரியாவின் பொருளாதாரம் மோசமடைந்துள்ள சூழலில், அங்குள்ள மக்கள் மிகுந்த விரக்தியில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பிரிவுத் தலைவர் வோல்கர் டர்க் கூறியுள்ளார்.

வட கொரியாவின் சில பகுதிகளில் மக்கள் பட்டினியால் வாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள்; பாதுகாப்பு சபையில் '2017க்குப் பின்னர் வட கொரியாவில் மனித உரிமைகள்' எனும் கூட்டத்தில் வோல்கர் பேசினார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் லிண்டா தோமஸ்–கிரீன்ஃபீல்ட் தலைமையில் கூட்டம் நடந்தது.

சட்ட விரோதமாக ஆயுதத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வட கொரியா அடிப்படைச் சுதந்திரத்தை மறுக்கிறது என்று கிரீன்ஃபீல்ட் சாடினார்.

வட கொரியாவுக்கு எதிரான கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த சீனா, பியோங்யாங்கை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வருவதில் உறுப்பு நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.

## கனடாவில் காட்டுத் தீ தீவிரம்: பல்லாயிரம் பேர் வெளியேற்றம்



கனடாவின் வடக்கில் உள்ள மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான யெல்லோனைப்பின் புறநகர் பகுதிகளில் இருந்து காட்டுத் தீ காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர். இதனால் மக்கள் உள்ளூர் விமானநிலையத்தில் நிரம்பி இருப்பதோடு வீதிகளில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

யெல்லோனைப் நகரின் 20,000 குடியிருப்பாளர்களை வெளியேறுவதற்கு உள்ளூர் அதிகாரிகள் நேற்று (18) நண்பகல் வரை கெடு விதித்திருந்தனர். கடந்த வியாழக்கிழமை (17) காட்டுத் தீ நகரில் இருந்து 16 கிலோமீற்றர் நெருங்கி இருந்தது.

சுமார் 240 காட்டுத் தீ சம்பவங்களை எதிர்கொண்டிருக்கும் நாட்டின் வடமேற்கு பிராந்தியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அவசர நிலை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

'வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு தினங்கள் காற்று வடமேற்கில் இருந்து மேற்கு–வடமேற்காக வீசி காட்டுத் தீ யெல்லோனைப் நகரை நோக்கி பரவும் நிலையில் கடினமான நாட்களை எதிர்கொண்டுள்ளோம்' என்று பிராந்திய தீயணைப்புச் சேவை பேஸ்புக்கில் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நகருக்கு வெளியில் உள்ள வீதிகளின் பெட்ரோல் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடிய வரலாற்றில் இது மிக மோசமான காட்டுத்தீப் பருவமாகக் கருதப்படுகிறது. நாடு முழுதும் 1,100 இடங்களில் காட்டுத்தீ இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது.

வழக்கத்துக்கு மாறான வெப்பமும் வறட்சியும் தான் இந்த நிலைக்குக் காரணம் என்று நிபுணர்கள் கூறினர்.

காலநிலை மாற்றம் வெப்பமான, வறண்ட காலநிலை அச்சுறுத்தலை அதிகரிக்கச் செய்து காட்டுத் தீயை ஏற்படுத்தி வருவதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## கொலம்பிய தலைநகரில் 6.3 ரிச்டர் அளவு பூகம்பம்




கொலம்பிய தலைநகர் பொகோடாவில் ஏற்பட்ட 6.3 ரிச்டர் அளவான பூகம்பம் மற்றும் அதன் பின்னரான அதிர்வுகளால் மக்கள் வீதிகளுக்கு ஓட்டம்பிடித்ததோடு இதன்போது ஒரு பெண் கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

உள்நாட்டு நேரப்படி கடந்த வியாழக்கிழமை (17) ஏற்பட்ட இந்த பூகம்பத்தில் கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதற்கான எந்த தகவலும் வெளியாகவில்லை என்று கொலம்பியாவின் தேசிய புவியியல் சேவை தெரிவித்துள்ளது.

பொகோடாவின் தெற்காக 40 கி.மீற்றர் தொலைவில் இருக்கும் எல் கல்வாரியோ சிறு நகரை மையம் கொண்டு பி.ப. 12.04 மணிக்கு இந்த பூகம்பம் ஏற்பட்டதாக கொல்பியா தெரிவித்துள்ளது. இது 30 கிலோமீற்றருக்கு குறைவான ஆழத்திலேயே பதிவாகியுள்ளது.

இதன்போது கட்டடங்கள் அதிர்ந்து சைரன் ஒலி எழுப்பப்பட்ட நிலையில் அச்சமடைந்த குடியிருப்பாளர்கள் வீதிகளை நோக்கி திரண்டுள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு எல் கல்வாரியோவை மையம் கொண்ட பூகம்பம் ஒன்றில் 11 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வீசட் செயலியை தடை செய்ய ஆஸி. திட்டம்



தேசிய பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து சீனாவின் 'வீசட்' செயலியை அரச சாதனங்களில் தடை செய்வதற்கு அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

அஸ்திரேலியாவில் தலையிட வெளிநாட்டு சக்திகள் சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதை விசாரணை செய்யும் அவுஸ்திரேலிய பாராளுமன்ற குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய அரசாங்க சாதனங்களில் வீசட் செயலியை தடை செய்தல் உட்பட சமூக ஊடகங்களுக்கான விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

17 பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ள இக்குழுவின் சிபாரிசுகளில் அபராதம் மூலம் அமுல்படுத்தக்கூடிய புதிய வெளிப்படைத்தன்மை விதிகள் உட்பட பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைக்குழுவின் சிபாரிசுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் உடன்பட முடியாது என்று குறிப்பிட்டுள்ள வீசட் செயலி நிறுவனம் இது தொடர்பிலான தங்களது கவலைகள் குறித்து கன்பராவுடன் கலந்துரையாடி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து டிக்டொக் செயலியை கடந்த ஏப்ரல் முதல் அவுஸ்திரேலியா, அரச சாதனங்களில் தடை செய்துள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 19 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.46
லுஹர் - 12.16
அஸர் - 03.31
மஃரிப் - 06.26
இஷா - 07.38

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் ஆவணி 03
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



### எதிர்பார்த்த வருமான இலக்குகளை அடைய

# உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அவசரமாக திருத்த நடவடிக்கை

அரச வரிப் பொறிமுறையை மேம்படுத்தும் வகையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை விரைவில் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமென, தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீக திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒரு சில அதிகாரிகள் தமது கடமைகளை சரியாகச் செய்வதில்லையெனவும் அவர்கள் தொடர்பாக இந்த புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூலம் கடுமையான தீர்மானங்களை எடுக்க முடியுமெனவும், அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நாட்டில் அரச வரிகளை அறவிடும் முறைமையில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாகவும் எனவே, நாட்டின் வரிக் கொள்கையை உடனடியாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீக திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு என்ற வகையில் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப, வரி விதிப்பதை முறைமைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமைய பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வருதல், வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்தல் மற்றும் அரச வரி வருமானத்தை அதிகரித்தல் ஆகிய விடயங்களில், அரசாங்கம் எதிர்பார்க்கும் இலக்குகளுக்கு செல்ல முடியுமா என்பது தொடர்பாக எமது குழு ஆராய்ந்து வருகின்றது" என்றார்.

மேற்குறிப்பிட்ட பிரதான 3 இலக்குகளையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் அடைய வேண்டியுள்ளதாகத் தெரிவித்த மஹிந்தானந்த அளுத்கமகே, அரச வரி வருமானத்தை அதிகரிப்பதை தவிர, ஏனைய இலக்குகளில் நாம் ஓரளவு திருப்திகரமான நிலைக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த வகையில், அரசாங்கத்துக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரும் நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களம் ஆகிய 3 நிறுவனங்களையும், குழு முன்னிலைக்கு அழைத்திருந்தோம்.

2023ஆம் ஆண்டில் அரசாங்கம் எதிர்பார்த்துள்ள அரச வரி வருமானம் 3,105 பில்லியன்களாகும். ஆனால், அவற்றில் இந்த மூன்று நிறுவனங்களிலிருந்தும் இதுவரையில் 1,179 பில்லியன்களே கிடைத்துள்ளது. அது அறவிடப்பட வேண்டிய வரியில் 38% வீதமாகும்.

இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் உரிய இலக்குகளை எட்ட வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளது. அந்த வகையில், அரச வரி வருமானம் தொடர்பான இலக்கை இந்த மூன்று நிறுவனங்களுக்கும் அடைய முடியுமா என்பது தொடர்பாக நாம் ஆராய்ந்தோம்.

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனியார் மயமாக்கப்பட மாட்டாது

### கூட்டு தொழிற்சங்கங்களிடம் அமைச்சர் பந்துல தெரிவிப்பு



வீதி அபிவிருத்தி அதிகார சபை தனியார் மயப்படுத்தப்பட மாட்டாதென்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் நேற்று (18) நடைபெற்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டு தொழிற்சங்கங்களின் முன்னிலையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அதேநேரம், ஊழியர்கள் குறைக்கப்பட மாட்டார்களெனவும், அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், "நெடுஞ்சாலைகள் அமைச்சரவையின் ஒப்புதலுடன் வர்த்தமானி மூலம் நிதி அமைச்சின் கீழுள்ள சஹாஸ்யா நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் இந்த எடுக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். இது தனியாரிடம் கைமாறுவதாக அர்த்தப்படாதெனவும், அவர் தெரிவித்தார்.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவால் எழுதப்பட்ட Economic Asanasiya என்ற நூலை அமைச்சர், தொழிற்சங்க தலைவர்களிடம் கையளித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சமிந்த அத்தலுகே, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ்.வீரகோன் உள்ளிட்ட ஒன்றிணைந்த தொழிற்சங்க பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

# இனத்தை காட்டிக்கொடுப்போர் குருந்தூர்மலை குறித்து கதை!

### கதைக்க அருகதையற்றவர்கள் என கஜேந்திரன் MP சாடல்

இந்துசமயத்தைச் சார்ந்தவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்களாக, இனத்தை காட்டிக் கொடுப்பவர்களாக செயற்படுகின்றார்கள் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.



நாக விகாரையில் நடைபெற்ற இரகசிய சந்திப்பில், குருந்தூர்மலையில் சிவன் கோவில் மற்றுமொரு பௌத்த விகாரை கட்டுவது என்ற தீர்மானத்தை இந்து – பௌத்த மதத் தலைவர்கள் இணைந்து எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த போது, "சச்சிதானந்தத்தோடு இந்துசமயத்தைச் சார்ந்தவர்கள் சிலர் கூலிக்கு மாரடிப்பவர்களாக உள்ளனர். அவர்கள் குருந்தூர் மலை தொடர்பாக

06

### மின்சாரம், பெற்றோலியம், வைத்தியசாலை;

# அத்தியாவசிய சேவைகளான முக்கிய மூன்று துறைகள்

### ஜனாதிபதியின் செயலாளரால் விசேட வர்த்தமானி

லோரன்ஸ் செல்வநாயகம்

மின்சாரத்துறை, பெற்றோலியத்துறை மற்றும் வைத்தியசாலை சேவைகள் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் மேற்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க, மின்சார விநியோகம் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் பெற்றோலியத்துறை உற்பத்தி, எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ன. அத்துடன், வைத்தியசாலைகள், மருந்தகங்கள், சிகிச்சை மற்றும் நோயாளர்கள் பராமரிப்பு உள்ளிட்ட அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.



# அமெரிக்காவின் முக்கியமான தூதுவர் இலங்கை வருகை

### கொழும்பில் இரு தரப்பு கலந்துரையாடல்

அமெரிக்காவின் இணையவெளி மற்றும் டிஜிட்டல் கொள்கைக்கான தூதுவர் நதானியேல் சி.ஃபிக் (Nathaniel C.Fick) உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை (20) இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக, அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.



வருகை தரும் அவர், அரச மற்றும் தனியார் துறையின் பிரதிநிதிகளுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ளார். அத்துடன், இணைய பாதுகாப்பு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் சுதந்திரம் என்பன தொடர்பாக கொழும்பில் இரு தரப்பு கலந்துரையாடல்களை அவர் முன்னெடுக்கவுள்ளதாகவும், அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெங்களூரில் நடைபெறும் G 20 டிஜிட்டல் பொருளாதார கூட்டத்தில் அமெரிக்காவின் தலைமை பிரதிநிதியாக கலந்துகொள்வதற்காக நேற்று அவர் இந்தியா சென்றதுடன், நாளைவரை இந்தியாவில் அவர் தங்கியிருப்பார். இதன் பின்னர், நாளையதினம் இலங்கைக்கு வருகை தரும் அவர், 23ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பாரெனவும், அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# சோளத்துக்கான இறக்குமதி வரியை ரூபா 75 இலிருந்து ரூ. 25 வீதமாக குறைக்க தீர்மானம்

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சோளத்துக்கான இறக்குமதி வரியை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.



இதற்கிணங்க, ஒரு கிலோ சோளத்துக்காக இதுவரை காலமும் அறவிடப்பட்டு வந்த 75 ரூபா இறக்குமதி வரியை 25 ரூபாவாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

சோளத்தை உபயோகப்படுத்தி தயாரிக்கப்படும் விலங்குகளுக்கான உணவு மற்றும் உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றின் விலைகளை குறைக்கும் நோக்கத்திலேயே சோளத்துக்கான இறக்குமதி வரியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சோளம் இறக்குமதியாளர்கள் ஏற்கெனவே ஒரு கிலோகிராம் சோளத்துக்கான இறக்குமதி வரியை 25 ரூபாவாக குறைக்க வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தனர்.

அதன்போது, அது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படுமெனவும், நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, கோதுமை மாவின் விலையை மேலும் குறைப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

### 13ஆவது திருத்தச் சட்டத்தினூடான

# அதிகாரப்பகிர்வு விடயத்தில் SLPP இரட்டை நிலைப்பாடு

### பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதன் மூலம் அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றுவதாக, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.



ஊடகங்களுக்கு விடுத்துள்ள விசேட அறிக்கையொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


"நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கான அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தார்மீக உரிமை

06

### மின் உற்பத்தி நிலையங்களுக்கான

# நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு குறைந்தது

மின்சார உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீரின் கொள்ளளவு தற்போது 23 சதவீதமாக குறைந்துள்ளதாக, இலங்கை மின்சார சபை தெரிவித்தது.



ரந்தெனிகலவில் கொள்ளளவு 8.1 சதவீதமாகவும் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 27 சதவீதமாகவும் குறைந்துள்ளது.

சமனலவெவ நீர்த்தேக்கத்தின் மொத்த கொள்ளளவு 1.9 சதவீதமாக குறைந்துள்ளது. இந்நிலைமைகளினால், நாட்டின் மின்சாரத் தேவையில் 80 சதவீதம் நிலக்கரி மற்றும் அனல் மின்சாரம் மூலம் வழங்கப்படுகிறது.

இதேவேளை, 100 மெகாவோட் மின்சாரத்தை 6 மாத காலத்துக்கு கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அரசிடமிருந்து டோனியர் 228 விமானம் விமானப்படையிடம் கையளிப்பு



இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தின் வருடாந்த பராமரிப்புச் சேவைகளுக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தல் மற்றும் அதற்கு மாற்றீடாக, கடல்சார் கண்காணிப்பு டோனியர் விமானமொன்றை இலங்கை விமானப்படைக்கு கையளிப்பதற்காக கடந்த புதன்கிழமை (16) கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் நிகழ்வு நடைபெற்றது. இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கிணங்க, இந்திய கடற்படையின் டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம் கடந்த 2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி இரண்டு வருட காலத்துக்கு இலங்கை விமானப் படையிடம் கையளிக்கப்பட்டது.

# நிலங்களை ஆக்கிரமிக்க காடுகளுக்கு தீ வைப்பு!

### திட்டமிடும் கும்பல் குறித்து எச்சரிக்கை

நில ஆக்கிரமிப்புக்காக திட்டமிட்ட குழுக்கள் இந்த வருடத்தில் மட்டும் 25,000 ஏக்கர் காடுகளை தீக்கிரையாக்கியுள்ளதாக, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்தனர். தப்போவ வனப்பகுதியில் 50 ஏக்கர் காணி தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.




வரட்சியான காலப்பகுதியிலேயே இந்தக் குழுக்கள் காடுகளை தீக்கிரையாக்குவதாக, நில மற்றும் விவசாய சீர்திருத்தத்துக்கான இயக்கத்தின் தலைவர் சஜீவ சாமிகர தெரிவித்தார்.

வலயங்களில் திட்டமிட்ட குழுக்கள் காடுகளுக்கு தீ மூட்டுகின்றன. அரசாங்கம் எடுத்துள்ள தவறான கொள்கைகளால் இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

# வங்கி கணக்கு ஒன்றினுள் ஊடுருவிய உக்ரைன் பெண்

### ரூ. ஒரு கோடி 27 இலட்சத்து 65 ஆயிரம் மோசடி

இலங்கையிலுள்ள வங்கி கணக்கொன்றுக்குள் ஊடுருவிய உக்ரைன் நாட்டுப் பெண்ணொருவர் பணத்தை கொள்ளையடித்த சம்பவமொன்று தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.



இலங்கையில் தனியார் வங்கிக் கணக்கொன்றின் கணினி தரவு கட்டமைப்பில் நுழைந்த உக்ரைன் பெண், ஒரு கோடியே 27 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவை மோசடியாக பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் ஏற்கெனவே இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டாரா? எனும் கோணத்தில் இரகசிய பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபரான இந்த உக்ரைன் பெண், சர்வதேச மோசடியாளராக இருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது. அவர் தொடர்பான கூடுதல் தகவல்களை வெளியிட சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடுவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 02

### குறள் தரும் சிந்தனை



அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது

*எதிரிகளால்கூட வழங்க முடியாத வேதனையை, அறிவில்லாதவர்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொள்வார்கள்.*

# பெரும்பான்மை மக்களுக்கு அச்சமூட்டும் பிரசாரங்கள்!

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை கருப்பொருளாக வைத்துக் கொண்டு தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ஒருதரப்பினர் சமீப காலமாக பெரும் குரலெழுப்பி வருகின்றனர். 13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், நாட்டில் குழப்பநிலை ஏற்படுமென்றும், வடக்கு, கிழக்குப் பிரதேசம் தாரைவார்க்கப்பட்டு விடுமென்றும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் கோஷமிடுகின்றனர்.

இவ்வாறு கோஷமிடுகின்றவர்களில் பலரிடம் 13 ஆவது திருத்தம் என்னவென்பது குறித்து போதிய விளக்கம் கிடையாதென்பது வேடிக்கையான விடயம்! 13 ஆவது திருத்தம் என்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமே உரியதல்ல என்பதும் அவர்களில் பலருக்குத் தெரியாது போலிருக்கின்றது. 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இலங்கையில் அனைத்து மாகாணங்களுக்குமே சரிசமமாகக் கிடைக்குமென்பதையும் அவர்கள் தெரிந்திருக்கவில்லை.

13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மாத்திரமே பெற்றுக் கொள்ளப் போகின்றன என்றுதான் தென்னிலங்கை அரசியல்வாதிகளில் பலர் நினைக்கின்றார்கள் போலுள்ளது. அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் அரசியல் அதிகாரத்தை வாரிவழங்க அரசாங்கம் தயாராகி விட்டது என்ற எண்ணத்திலேயே தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலர் கோஷமெழுப்புகின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில், சில அரசியல்வாதிகளோ வேறுவிதமானவர்களாவர். 13 ஆவது திருத்தம் என்பதை அவர்கள் விளக்கமாகத் தெரிந்திருந்த போதிலும் கூட, பெரும்பான்மை மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கும் விதத்தில் அவர்கள் உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களை மக்கள் மத்தியில் மேற்கொண்டு வருவதைக் காண முடிகின்றது. 13 ஆவது திருத்தமானது வடக்கு, கிழக்குக்கு மாத்திரமே வழங்கப்படுவதென்ற தோரணையில் அவர்கள் பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

13 ஆவது திருத்தமென்பது சமஷ்டிக்கு ஒப்பானதென்றும், அது நாட்டின் பிரிவினைக்கு வழிகோலுமென்றும் சிங்கள மக்களை அச்சமூட்டும் விதத்தில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் பிரசாரம் செய்வதைக் காண முடிகின்றது. இவ்வாறான பிரசாரங்கள் காரணமாக 13 ஆவது திருத்தம் என்பது சமீப காலமாக பெரும்பான்மை மக்களை வீணான கிலிக்கு உள்ளாக்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

நாடு பிளவுபட்டு விடுமோ என்பதுதான் சிங்கள மக்களின் பிரதான அச்சமாகும். நாட்டில் மீண்டுமொரு அமைதியின்மை ஏற்பட்டு விடக்கூடாதென்ற எண்ணம் அவர்கள் மத்தியில் உள்ளதைத் தவறென்று கொள்ளவும் முடியாதிருக்கின்றது. இந்த விடயத்தைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தத்தை வைத்துக் கொண்டு மக்களை அச்சமூட்டும் அரசியல்வாதிகள் உண்மையிலேயே விஷமத்தனமானவர்களாவர். நாட்டில் அமைதியும் ஐக்கியமும் நிலவுவதை அவர்கள் விரும்பவில்லை என்பதுதான் உண்மை.

13 ஆவது திருத்தம் என்பது பாரதூரமானதொரு விடயம் அல்ல. மத்திய அரசின் அதிகாரங்களில் சிலவற்றை மாகாணசபைகளுக்கு பகிர்ந்தளிப்பதே அதில் அடங்கியுள்ள விடயமாகும். ஒவ்வொரு மாகாணத்திலும் அரசியல் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, நாட்டின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதே 13 ஆவது திருத்தத்தின் அர்த்தமாகும்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் உக்கிரமாக நிலவிய அன்றைய காலகட்டத்தில் இந்தியாவின் ஆலோசனையின் பேரில் இருநாடுகளுக்குமிடையிலான சமாதான ஒப்பந்தத்தின் விளைவாக மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு தனியான மாகாணசபை உருவாக்கப்பட்டு அப்பிரதேச மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரங்கள் கைளிக்கப்படுவதன் மூலம் வடக்கு, கிழக்கில் சுமுகநிலைமையை ஏற்படுத்து முடியுமென்ற எண்ணம் இந்தியாவுக்கு அன்றிருந்தது.

அன்றைய யுத்தநிலைமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கும் மாற்றுவழிகள் இருக்கவில்லை. அதன் தொடர்ச்சியாக உருவானதே 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் மாகாணசபைகளும் ஆகும்.

எனினும் 13 ஆவது திருத்தத்தினாலும் மாகாணசபை முறைமையினாலும் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அதன் பின்னர் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், அரசியல் அதிகாரங்கள் கோரும் சாத்விகப் போராட்டங்களை இன்னும்தான் முடிவுக்குக் கொண்டுவர முடியாதிருக்கின்றது. 13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்கியிருப்பின் வடக்கு, கிழக்கில் அரசியல் உரிமைக் கோஷங்கள் ஓரளவாவது தணிந்திருக்கக் கூடும்.

இங்கு உண்மை நிலைமை யாதெனில் 13 ஆவது திருத்தமானது முழுமையாக இன்னுமே நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதாகும். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் முட்டுக்கட்டைகள் ஏற்படுத்தப்படுவதன் காரணமாகவே அத்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இன்னும் தாமதம் நிலவுகின்றது.

இந்நிலையில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியான நிலைப்பாட்டில் உள்ளார். அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம் நாட்டில் சுமுகநிலைமையை ஏற்படுத்த முடியுமென்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு ஆகும். எனினும் 13 ஆவது திருத்தத்துக்கு பயங்கரமான வடிவம் கொடுத்து, அதனை அமுல்படுத்துவதில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்துவது நாட்டின் எதிர்கால நலனுக்கு நன்மையை விளைவிக்கப் போவதில்லை.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையில் அனைத்து இனமக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் பாடுபட்டவர் பெரி. சுந்தரம்

நாட்டுப்பற்றாளர், தொழிலாளர் தலைவர், சுதந்திரப் போராளி எனப் பெயர்பெற்ற மறைந்த பெரியண்ணன் பெரி. சுந்தரம் அவர்கள் (1890_1957) மலையத்தில் நெலியமலை மடுல்கொல்லையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1930 களில் மலையகப் பெருந்தோட்ட மக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க எழுச்சியுற்ற இலங்கை_ இந்திய காங்கிரஸ், இலங்கை இந்தியத் தொழிலாளர்கள் சங்கம் என்பவற்றின் தோற்றத்திற்காகப் பாடுபட்ட பிதாமகன்களில் பெரி.சுந்தரமும் ஒருவர்.



இந்தியச் சமூகத்தின் நலன்களுக்காக மட்டுமன்றி, இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள ஏனைய இலங்கைத் தலைவர்களுடன் இணைந்து பாடுபட்ட பெருமை அவருக்குரியது.

1890 இல் மடுல்கெல்லநில்லோமலித் தோட்டத்தில் பெரியகங்காணி பெரியண்ணனுக்கும் மீனாட்சியம்மாளுக்கும் மகனாகப் பிறந்த பெரி. சுந்தரம் தமதுஆரம்பக் கல்வியை ஒரு தோட்டப் பாடசாலையில் பயின்றார். பின்னர் அக்காலத்தில் தோட்டப்பாடசாலைகளில் படித்தவர்கள் ஆரம்பக் கல்விக்குப் பின்னர் கல்வியைத் தொடருவதில்லை. ஆனால் பெரி. சுந்தரம் தனது குடும்பத்தாரின் ஆதரவுடன் கண்டி திருத்துவக் கல்லூரி,முத்துவல் சென் தோமஸ் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார். பின்னர் கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்ற அவருக்கு, உயர்கல்விக்காக 1913 இல் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் கல்லூரிக்கு அனுமதி கிடைத்தது. தமது உறவினர்கள், நண்பர்களிடம் உதவிகளைப் பெற்று இங்கிலாந்தில் உயர்கல்வியை மேற்கொண்டார்.

பெரி. சுந்தரத்தின் அறிவாற்றலையும் உயர் பண்புகளையும் அவதானித்த கேம்பிரிட்ஜ் சமூகம் அவருக்குப் பல பதவிகளை வழங்கி அழகு பார்த்தது. கேம்பிரிட்ஜ் இலங்கைச் சங்கம், இந்தியச்சங்கம் என்பவற்றின் தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டார். இம்மானுவேல் சட்டக்கழகம்,கேம்பிரிட்ஜ் யூனியன் என்பவற்றில் பலபதவிகளும் அவருக்குக் கிடைத்தன. 1916 இல் அவர் பிஏ, எல் எல் பி ஆகிய பட்டங்களைப் பெற்று அதேஆண்டில் கிறீன் இன்னில் பாகீஸ்டராகவும் தகைமை பெற்றார். இவ்வாறான உயர்மட்டங்களையும் தகைமைகளையும் பெற அவர் எடுத்துக் கொண்ட காலம் 33 மாதங்கள் மட்டுமே.





1916 இல் இலங்கை திரும்பியதும் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இணைந்து கொண்டார். பிரித்தானியாவில் இருந்தபோது அங்கிருந்த மனிதஉரிமை மற்றும் சிவில் உரிமைகளுக்காகப் போராடிய இயக்கங்களில் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த பெரி. சுந்தரம் இலங்கையின் தேசியவிடுதலை, சமூகசீர்திருத்தம் என்பற்றில் தீவிரஅக்கறை செலுத்தத் தொடங்கினார்.

சேர் பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், சேர். பரண்ஜயத்திலக்கா, இ. டபிள்யூ. பெரேரா, டி.எஸ்.சேனனாயக்காஆகியோருடன் இணைந்து 1919 இல் இலங்கை தேசிய காங்கிரஸ் அமைப்பு உருவாக உழைத்தார்.

அக்காலத்தில் வெள்ளையருக்கான தனியான புகையிரதஆசனங்கள் இருந்தன. முதல் வகுப்புப் பெட்டியில் அமர இருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தார். பெரி. சுந்தரத்தின் இந்த நடவடிக்கை அக்காலத்தில் நாட்டில் பெரிதும் பாராட்டப்பட்டது. தீர்ப்பும் அவருக்குச் சார்பாகவே வழங்கப்பட்டது. குடியேற்ற ஆட்சியாளருக்கு எதிராக அவர் நடத்திய முதலாவது போராட்டம் இதுவாகும்.

1928 இல் இலங்கை சட்டக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பதவியேற்ற பெரி. சுந்தரம் அங்கு 26 ஆண்டுகள் பணியாற்றினார். 1928 இல் நியமிக்கப்பட்டடொளமூர் ஆணைக்குழு நாட்டு மக்களுக்கு சர்வஜன வாக்குரிமையையும் உள்ளக ஆட்சியுரிமையையும் வழங்கி இருந்தது. டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது அரசாங்க சபைக்கு ஹட்டன் தொகுதியிலிருந்து பெரி. சுந்தரம் தெரிவு செய்யப்பட்டார். தொழில், கைத்தொழில், வர்த்தகத்துறை நிர்வாகக் குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட பெரி. சுந்தரம், அத்துறை சார்ந்த அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவ்வகையில் நாட்டின் முதலாவது தொழில் அமைச்சர் என்ற பெருமை பெரி. சுந்தரத்திற்குஉரியது. 1932 இல் இலங்கை அரசின் வர்த்தகக் குழுவுக்குத் தலைமை தாங்கி சிம்லாவுக்கு விஜயம் செய்தார்.

அக்காலத்தில் நாட்டிலிருந்த வங்கித் துறை முற்றாகவே வெளிநாட்டு வங்கிகளின் ஏகபோக உரிமையாக இருந்தது. அவ் வங்கிகள் குடியேற்ற ஆட்சியாளர்களினதும் வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களினதும் ஏகாதிபத்திய நலன்களைப் பேணிவந்தன. பெரிசுந்தரம் தேசியரீதியான வர்த்தக மேம்பாட்டை ஏற்படுத்த விரும்பினார். பொருளாதார விடுதலைக்கு வெளிநாட்டு வங்கிகள் ஒருதடையாக இருந்ததை உணர்ந்தார். இதன் காரணமாக நாட்டிற்கு உகந்த ஒரு தேசியவங்கியை உருவாக்கி வெளிநாட்டு வங்கிகளுடன் அதனைப் போட்டியிட வைக்க விரும்பினார். அவர் இதற்கென ஒருவங்கி ஆணைக்குழு நியமிக்கப்படக் காரணமாக இருந்தார். இந்தஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரிலேயே இன்று பிரசித்தி பெற்ற அரசாங்க வங்கியான இலங்கைவங்கி உருவாக்கப்பட்டது.

அக்காலத்தில் பெரி. சுந்தரம் பிரெஞ்சு அறிஞர் ரூசோ, ஆங்கில அறிஞர்கள் ஹொம்பஸ், பெற்தம் ஆகியோரின் சிந்தனைகளால் கவரப்பட்டிருந்தார்.

**எச்.எச்.விக்கிரமசிங்க...**

# கோவிலூர் விஜிதாவின் நூல் கிழக்கு ஆளுநரிடம் கையளிப்பு



திருக்கோவில் பிரதேசத்திலுள்ள விநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்தவரும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமை புரியும் பொலிஸ் சார்ஜன்ட்டுமான கே.விஜிதாவின் 'புதுவரவு' எனும் சிறுவர் பாடல்நூல் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வழங்கி வைக்கப்பட்டது.

திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஆலயபரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் இந்நூல் ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வழங்கி வைக்கப் பட்டது.

அங்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பொதுச்செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் ச. நவநீதன், திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஜே. அதிசயராஜ், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். குணபாலன், திருக்கோவில் முன்னாள் பிரதேச சபை தவிசாளர் ஐ.கமல்ராஜ் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

திருநாவுக்கரசு ஆதீனத்தின் பணிப்பாளர் கண. இராஜரெத்தினத்தின் வேண்டுகோளை ஏற்று உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளிக்கையில் இந்த ஏற்பாட்டை செய்திருந்தார்.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# வீரத்திடல் அல்-ஹிதாயா மகாவித்தியாலயத்தில் திறந்த ஆராதனை வெளியரங்கு திறந்துவைப்பு





சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள சவளக்கடை வீரத்திடல் அல் ஹிதாயா மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம் முனாஸிர் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் டொக்டர் எஸ்.எம்.எம்.செய்யது உமர் மௌலானா மற்றும் கௌரவ அதிதியாக நற்பிட்டிமுனை சீ.எம்.ஹலீம் (எல்.எல்.பி) ஆகியோர் கலந்துகொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கினை திறந்து வைத்தனர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கு பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம் முனாஸிர் பிரதி அதிபர் ஏ.எம்.சாலித்தீன் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுகுழுவின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சி.எம் முபீத் மற்றும் சீ.எம்.ஹலீம் ஆகியோரின் சொந்த நிதியில் இருந்து நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் ஆரம்பத்தில் அதிதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து தேசிய கீதம், பாடசாலை கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த ஆராதனை வெளியரங்கு அதிதிகளால் திறந்து வைக்கப்பட்ட பின்னர் நிகழ்வின் ஆரம்பத்தில் தலைமை உரையினை அதிபர் ஆற்றினார்.

பாடசாலையின் பௌதீக வளங்களின் தேவை குறித்து கண்காணிப்பு நடவடிக்கையில் பிரதம அதிதியாக வருகை தந்த சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செய்யது உமர் மௌலானா ஈடுபட்டதுடன் பாடசாலை நூலகத்தில் உள்ள நினைவுக்குறிப்பில் பதிவுகளை மேற்கொண்டு பாடசாலை அதிபர் உட்பட நிர்வாகத்தினரை பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. இதில் ஆசிரியர்கள், அல் கரீம் பவுண்டேசன் நிறுவனத்தின் உறுப்பினர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# உலகமே திரும்பிப் பார்க்கும் வகையில் அ.தி.மு.க மாநாடு



ஜெயலலிதாவின் மரணத்திற்குப் பிறகு மதுரையில் மாநாடு நடத்துவதன் மூலம் தென்மாவட்டத்தில் தனது பலத்தை நிரூபிக்க தயாராகி வருகிறது அதிமுக.

மதுரையில் நடைபெறும் அதிமுக எழுச்சி மாநாட்டிற்கு தொண்டர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்து பல்வேறு விதமான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். அதிமுக பொன்விழா எழுச்சி மாநாட்டிற்காக மதுரை வலையங்குளம் பகுதியில் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநாடு மேடை மற்றும் பந்தல் என பிரமாண்ட முறையில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மதுரையில் அ.தி.மு.க.வின் வீர வரலாற்றின் எழுச்சி மாநாடு வருகிற 20 ஆம் திகதி பிரமாண்டமாக நடைபெறுகிறது. இதற்கான ஆயத்த பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இதற்காக மதுரை ரிங் ரோடு வலையங்குளம் பகுதியில் சுமார் 65 ஏக்கர் நிலப்பரப்பில் பிரம்மாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் விறுவிறுப்பாக இரவுபகலாக பணியாற்றி வருகிறார்கள். சுமார் 10இலட்சம் பேர் பங்கேற்கும் வகையில் மாநாட்டு பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வாகன நிறுத்துமிடம் மற்றும் உணவு தயாரிப்புக்கூடம், உணவு பரிமாறும் அரங்குகள் என்று சுமார் 300 ஏக்கர் பரப்பில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாநாட்டின் முகப்பில் வீர வரலாற்றின் எழுச்சி மாநாடு என்ற வாசகங்களுடன் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆகியோரது உருவப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

பிரம்மாண்ட மலை போல அமைத்து உச்சியில் எம்ஜிஆர், ஜெயலலிதா உருவ சிலை அமைக்கப்பட்டுள்ளது. முகப்பு பகுதியில் சுமார் 51 அடி உயர அதிமுக கொடிக்கம்பம் அமைக்கப்பட்டுள்ளது. மாநாட்டில் இன்னிசை நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சிகள் மற்றும் அ.தி.மு.க. அரசின் சாதனைகள் குறித்த கவியரங்கம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாலை 4 மணி அளவில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக மாநாட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. சென்னையிலிருந்து மதுரை வரை நடைபெறும் மாநாடு தொடர் ஜோதி ஓட்டத்தை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்துள்ளார்.

இந்த நடைபயணத்தில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று சென்னையில் இருந்து மதுரையை நோக்கி செல்கின்றனர். சென்னையில் தொடங்கிய இந்த பயணம், மாநாடு நடைபெறும் நாளில் மதுரையை சென்றடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. அதிமுக மாநாட்டினை பிரம்மாண்டமாக நடத்திக்காக நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர். 60,000 சதுர அடியில் மாநாட்டிற்கான மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஒரு மாதத்திற்கும் மேலாக பணிகள் நடைபெற்று வருகிறது. மழை மற்றும் வெயிலினால் எவ்வித பாதிப்பும் ஏற்பட்டு விடாமல் ஒரு இலட்சம் பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் மாநாட்டிற்காக தகரக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

"உலகமே திரும்பிப் பார்க்கும்வகையில் இந்த மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்து வருகிறோம். மாநாட்டுக்கு வரும் தொண்டர்களுக்கு தேவையான பாதுகாப்பு வசதிகள், தேவையான குடிநீர், இருக்கைகள், காலை முதல் இரவு வரை சுடச்சுட உணவு ஆகிய ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெறுகிறது" என்று செய்தியாளர்களிடம் பேசிய கே.பி. முனுசாமி கூறியுள்ளார்.

# பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் பலத்தை உறுதிப்படுத்தியுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை!





## அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலிலும் பா.ஜ.கவுக்கே வெற்றி என்கிறார் இந்தியப் பிரதமர்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசுக்கு எதிராக மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தமையானது மோடி அரசாங்கத்தின் பலத்தை மீண்டுமொரு தடவை உறுதி செய்துள்ளது.

மணிப்பூர் வன்முறை குறித்து நாடாளுமன்றத்தில் விரிவான விவாதம் நடத்த வேண்டும் என்றும், பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன. இதனை அரசு நிராகரித்ததால், மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சார்பில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது.

காங்கிரஸ் உறுப்பினர் கவுரவ் கோகாய் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது மக்களவையில் மூன்று நாட்களாக விவாதம் நடைபெற்றது. இவ்விவாதத்தில் காங்கிரஸ் உறுப்பினர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தனர்.

இந்நிலையில் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன், ஸ்மிருதி இராணி, ஜோதிர் ஆதித்ய சிந்தியா உள்ளிட்டோர் பதிலளித்தனர்.

இதன் பின்னர் பிரதமர் நரேந்திர மோடியின் உரைக்கு மத்தியில் எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு செய்த நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது குரல் வாக்கெடுப்பு நடைபெற்றது. குரல் வாக்கெடுப்பின்படி எதிர்க்கட்சிகளின் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

இதற்கு முன்னதாக, மக்களவையில் கொண்டுவரப்பட்ட மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதத்துக்கு பிரதமர் நரேந்திர மோடிபதிலளித்து உரையாற்றுகையில், "நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் அனைத்தும் பா.ஜ.கவுக்கு ராசியானவை" எனக் கூறினார். 2028 ஆம் ஆண்டிலும் எதிர்க்கட்சிகள் பா.ஜ.க அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரும் எனவும் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

"எதிர்வரும் தேர்தல்களில் மக்களின் ஆசியுடன் முந்திய அனைத்து சாதனைகளையும் முறியடித்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியும், பா.ஜ.கவும் மாபெரும் வெற்றியுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும். 2018 ஆம் ஆண்டு இதே போல் எனது தலைமையிலான அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதன் விளைவாக எதிர்க்கட்சிகள் தேர்தலில் தோல்வியடைந்தன" என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

சில எதிர்க்கட்சிகள் ஏழைகளின் பசியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்றும் அதிகாரப் பசிதான் அவர்கள் மனதில் உள்ளது என்றும் அவர் விமர்சித்தார்.

காங்கிரஸின் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் ஆணவத்தால் அவர்களால் யதார்த்தத்தைப் பார்க்க முடியவில்லை என்றும் விமர்சித்த பிரதமர் மோடி, 1962 இற்குப் பிறகு தமிழ்நாட்டிலும், 1972 இற்குப் பிறகு மேற்கு வங்கத்திலும் அவர்களால் ஆட்சியை பிடிக்க முடியவில்லை என்றும் கூறினார்.

எதிர்க்கட்சிகளின் அமளிதுமளிக்கு மத்தியிலேயே நரேந்திர மோடி தனது உரையை ஆற்ற வேண்டியிருந்தது.

"நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்த எதிர்கட்சிகள் எந்த தயாரிப்புப் பணிகளும் செய்யவில்லை. Home work செய்யாமல் இங்கு வந்துவிட்டனர். அடுத்த முறை தயாரிப்புடன் வர வேண்டும்" என்று எதிரணியினரைப் பார்த்து கிண்டலாகக் கூறினார் பிரதமர் நரேந்திர மோடி.

"இரண்டு தடவை முழுப்பெரும்பான்மை ஆட்சி அமைத்து ஒரு ஏழைத் தாயின் மகன் இங்கே அமர்ந்திருப்பது எதிர்க்கட்சிகளுக்கு கவலை தருகின்றது. இது அவர்களை உறங்க விடவில்லை. 2024 இல் கூட நாட்டு மக்கள் எதிர்க்கட்சிகளை உறங்க விட மாட்டார்கள்" என்று பிரதமர் கூறினார்.

"காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயே கச்சதீவு தாரைவார்க்கப்பட்டது. ஆனால் தமிழக முதலமைச்சர் கச்சதீவை மீட்டுத் தரும்படி எனக்குக் கடிதம் எழுதுகிறார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது எங்களுக்கானதல்ல, எதிர்கட்சிகளுக்குத்தான்" என்று பிரதமர் நரேந்திர மோடி மேலும் கூறினார்.

"மத்திய அரசு மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். கோடிக்கணக்கான மக்களுக்கு நன்றியை தெரிவிக்க சபைக்கு வந்துள்ளேன். முந்திய அனைத்து சாதனைகளையும் முறியடித்து, பா.ஜ.க வெற்றி பெறுவதை எதிர்க்கட்சிகள் முடிவு செய்திருப்பதை இன்று என்னால் காண முடிகிறது. கடவுள் மிகவும் அன்பானவர். அவர் சில ஊடகங்கள் மூலம் பேசுகிறார். கடவுளின் ஆசியால் எதிர்க்கட்சிகள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததாக நம்புகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டும் இதே போன்ற தீர்மானம் கொண்டு வந்த போது, இந்த சோதனை எங்களுக்கானது அல்ல; எதிர்கட்சிகளுக்கானது என்று எடுத்துரைத்தேன். முடிவில், கடந்த மக்களவைத் தேர்தலில் படுதோல்வியை சந்தித்தனர். இந்த நம்பிக்கையில்லா வாக்கெடுப்பும் பாஜக அரசாங்கத்திற்கு பதிலாக எதிர்கட்சிகளுக்கு நம்பிக்கை வாக்கெடுப்பாக இருக்கும்" என்றார் நரேந்திர மோடி.

இதனையடுத்து வாக்கெடுப்பின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். நம்பிக்கை இல்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படுவதாக சபாநாயகர் தெரிவித்தார். அப்போது எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. இதனால் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி அடைந்தது.

இந்த விவாதத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி மணிப்பூர் வன்முறைக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். மணிப்பூரில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பி.ஜே.பி கூட்டணி அமோக வெற்றி பெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

"எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை எமது கூட்டணிக்கு ஒரு நல்ல சகுனம். எதிர்க்கட்சிகள் 'நோ போல்' வீசுகின்றன ஆனால் நாங்கள் சிக்ஸர் அடிக்கிறோம்" என்றும் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

# ரூ. 10 இலட்சம் பெறுமதியான திறன்பலகைகளை அன்பளிப்பு செய்துள்ள பொறியியலாளர் ராஜன்





மட்டக்களப்பு மேற்கு வலயத்துக்கு உட்பட்ட பின்தங்கிய பல பாடசாலைகளுக்கு 10 இலட்சரூபா பெறுமதியான திறன் பலகைகளை கனடாவில் வாழும் முனைக்காட்டைச் சேர்ந்த பொறியியலாளர் கோபாலபிள்ளை துரைராஜசிங்கம் ( ராஜன்) அன்பளிப்பு செய்துள்ளார்.

முனைக்காடு கிராமத்திலுள்ள பாடசாலைகளுக்கு 10 இலட்சம் பெறுமதியான திறன் பலகை (smart board) நன்கொடையாக வழங்கப்பட்டது.

முனைக்காடு கிராமத்திலே இருக்கின்ற முனைக்காடு விவேகானந்த மகாவித்தியாலயத்திற்கும் முனைக்காடு சாரதா வித்தியாலயத்திற்கும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான திறன் பலகைகள் (smart board ) அண்மையில் வழங்கப்பட்டிருந்த நிலையில் பொறியியலாளர் ராஜன் அண்மையில் பாடசாலைக்கு விஜயம் செய்திருந்த போது அவற்றை உத்தியோகபூர்வமாக கையளித்திருந்தார்.

பொறியியலாளர் ராஜன் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தில் பயின்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பத்தன, நுவரெலியா போன்ற பகுதிகளில் பிரதம பொறியியலாளராக பணியாற்றியிருந்தார்.

அத்துடன் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பங்களிப்பு செய்யும் விதத்தில் பயன்படுத்தப்படுகின்ற இந்த திறன் பலகைகளை (smart board) கையாள்வது தொடர்பிலான கருத்தரங்கும் ராஜன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

முனைக்காடு கிராம பாடசாலைகளின் வளர்ச்சியில் அர்பணிப்புடன் செயற்படும் பொறியியலாளர் ராஜன் பணி சிறக்க பலரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

காரைதீவு குறூப் நிருபர்...

# தமது பிள்ளைகளின் கல்விக்கு நேரம் ஒதுக்க முடியாத பெற்றோர் விடயத்தில் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் தவணைப் பரீட்சைகளில் பெற்றுக் கொள்ளும் புள்ளி விபரங்களை, சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களிடம் நேரடியாக ஒப்படைக்கும் வேலைத்திட்டத்தை பாடசாலை நிர்வாகம் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ், இம்முறை க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் முதலாந் தவணைப் பரீட்சைப் புள்ளிகள் பதியப்பட்ட மாணவர் விபரப் புத்தகம் மற்றும் திருத்தப்பட்ட வினாப் பத்திரங்களை பெற்றோர்களிடம் கையளிக்கும் வைபவம் பாடசாலை பிரதான மண்பத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ், பிரதியதிபர் எம்.ஆர். தாஹா, தரம் 11 வலயத் தலைவர் ஆசிரியர் எம். எஸ்.எம்.றபீக், ஆசிரியர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பெற்றோர் மற்றும் தரம் 11 மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய அதிபர் உவைஸ், பின்வரும் விடயங்கள் தொடர்பில் வலியுறுத்தினார்,

இப்பாடசாலையில் 41 வகுப்புக்களில் மொத்தம் 1397 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 70 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இங்குள்ள பௌதீக வளங்கள் 900 மாணவர்களுக்கு மாத்திரமே போதுமானவை.

கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் அடைவுமட்டங்களே ஒரு பாடசாலையின் தரத்தை நிர்ணயிக்கின்றது. அந்தவகையில், முனவ்வறா கனிஷ்ட கல்லூரி மாணவர்கள் கடந்த காலங்களில் திருப்திகரமான அடைவினை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். எதிர்காலத்திலும் அவ்வாறே முத்திரை பதிப்பர்.



அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ்

முதலாந் தவணையில் மொத்தம் 51 நாட்கள் பாடசாலை நடைபெற்றுள்ளது. எஞ்சிய இரு தவணைகளில் 118 நாட்கள் பாடசாலை நடைபெறவுள்ளது. ஆகையால், மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்தும் விடயத்தில் அனைவரும் நிறைவான ஒத்துழைப்பு நல்க வேண்டும். மேலதிக மாலைநேர வகுப்புக்களை அவசரமாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

நாம் பாடசாலைக்கு பெற்றோர்களை அழைக்கும் போது, அதிகமானவர்கள் வருகை தர மறுக்கின்றனர். வேறு காரணங்கள், சாக்குப் போக்குக் கூறி நியாயம் கற்பிக்கின்றனர். இவ்வாறானவர்களிற் சிலர் வாடகைப் பெற்றோர்களை அனுப்பி வைக்கின்றனர். இது ஆரோக்கியமானதல்ல. இவ்வாறு தாய் அல்லது தந்தை தவிர்ந்த ஏனையவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பரீட்சை பெறுபேற்று ஆவணங்களில் பல்வேறு மாற்றங்கள், குளறுபடிகள் செய்யப்பட்டுள்ளமை பின்னாட்களில் தெரியவந்துள்ளது. இது மிகவும் கவலைக்குரியது.

தனது பிள்ளையின் கல்விக்கு நேரம் ஒதுக்க முடியாத பெற்றோர்கள் குறித்து ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. 1397 பிள்ளைகளுடன் எனது 04 பிள்ளைகளுமாக மொத்தம் 1401 பிள்ளைகளை நிர்வகித்து வருகின்றேன். ஆனால், சில பெற்றோர் தமது ஒரே பிள்ளையை நிர்வகிக்க முடியாது சிரமப்படுகின்றனர். எம்மிடமும் முறையிடுகின்றனர். பின்னாட்களில் பாதிக்கப்படுகின்றனர்.

முனவ்வறா கனிஷ்ட கல்லூரியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் திறமையானவர்கள். இருந்தாலும் பெற்றார்கள் முழுமையாக பாடசாலையை மாத்திரம் நம்பியிருக்கக் கூடாது. முதலாந்தவணைப் பரீட்சையில் 6 ஏ தர சித்திகளுக்கும் அதிகமான பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் பாடசாலையில் விரைவில் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாணவர்களின் பாடசாலை வரவு தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும். அது பெறுபேற்றை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்து விடுகின்றது. கடந்த வருடம் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவியொருவர் பாடசாலை நடைபெற்ற மொத்தம் 191 நாட்களிலும் சமூகமளித்திருந்தார். 09 பாடங்களில் 03 தவணைப் பரீட்சைகளிலும் 27 ஏ தரச் சித்திகளைப் பெற்றிருந்தார்.

தங்களது பிள்ளைகளின் தினசரி நடவடிக்கைகள் தொடர்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளின் நண்பர்கள் குறித்து அவதானமாகத் தொழிற்படுங்கள். தங்களது பிள்ளை மூத்த வயதினருடன் நட்புக் கொள்வதையோ, சேர்ந்திருப்பதையோ ஒருபோதும் அனுமதிக்க வேண்டாம்.

வீட்டில் இருப்பதை விடவும், அதிபர் என்ற வகையில் பாடசாலையிலயே அதிக நேரத்தை செலவு செய்கின்றேன். ஆகையால், தங்களது பிள்ளையின் கல்வி தொடர்பில் யாரும் எப்போதும் பாடசாலைக்கு சமூகமளிக்க முடியும். அதிபரை, சந்திக்க முடியும். பேச முடியும். அதனையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# அரசியல் கட்சிகளுக்கு தடை விதித்த தலிபான்கள் அரசு!



ஆப்கானிஸ்தான் நாடு தலிபான்கள் வசம் சென்றதில் இருந்தே அங்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், தற்போது ஆப்கானிஸ்தான் நாட்டில் அரசியல் கட்சிகளுக்கு தடை விதிக்கப்படுவதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டமைப்பு வெளியேறியதையடுத்து அங்கு ஆட்சி அதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றினர். தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை பிடித்ததுமே, அங்கு கொடூரமான கட்டுப்பாடுகளை கொண்டு வருவார்கள் என அஞ்சிய மக்கள் நாட்டை விட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தனர். ஆனால், தங்களது முந்திய ஆட்சி காலம் போல தற்போதைய ஆட்சி இருக்காது என்று தலிபான்கள் உத்தரவாதம் கொடுத்தனர்.

ஆனாலும், தலிபான்களின் சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக உள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் உத்தரவாதத்தை காற்றில் பறக்க விட்ட தலிபான்கள், பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்த தொடங்கிவிட்டனர். குறிப்பாக பெண்களுக்கு எதிர்பார்த்தது போலவே, ஆப்கானிஸ்தானில் கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன.

அனைத்து அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் பெண்கள் கல்வி பயில தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பல்கலைக்கழக கல்வி நிலையங்களில் கூட ஆண்களுடன் சேர்ந்து படிக்கவும் அனுமதி அளிக்கவில்லை. ஆண்கள் துணையின்றி விமானங்களில் பயணிக்க தடை, பொது இடங்களில் ஆடை கட்டுப்பாடு, பொழுதுபோக்கு பூங்கா மற்றும் உடற்பயிற்சி கூடம் செல்ல தடை என பெண்களுக்கு பல கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இப்படி கட்டுப்பாடுகளை கொண்டு வரும் தலிபான், தற்போது பிறப்பித்துள்ள ஒரு உத்தரவு அந்த நாட்டின் அரசியல் கட்சிகளை அதிர வைத்துள்ளது. ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி 2 ஆண்டுகள் முடிந்த நிலையில், அது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த தலிபான்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டனர். தலிபான் அரசின் நிதி அமைச்சர் அப்துல் ஹக்கிம் ஷாரேய் செய்தியாளர்களிடம் இது பற்றி கூறுகையில், " ஷரியத் சட்டத்தின்படி அரசியல் கட்சி என்ற கருத்து இல்லை. ஷரியத் அடிப்படையில் அரசியல் கட்சிகள் நாட்டில் செயல்படுவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. அரசியல் கட்சிகள் தேச நலனுக்காகவோ, தேசம் பாராட்டும் படியோ செயல்படுவதில்லை" என்றார்.

எனினும் இது குறித்து வேறு விபரங்கள் எதையும் அவர் அளிக்கவில்லை. ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வரும் கட்சிகளுக்கு தலிபான்களின் இந்த முடிவு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

# இனிய நந்தவனம் இதழின் இலங்கை சிறப்பிதழின் அறிமுகவிழா இன்று யாழில்

மக்கள் மேம்பாட்டு மாத இதழான இனிய நந்தவனம் இதழின் இலங்கைச் சிறப்பிதழின் அறிமுகவிழா இன்று 19ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு யாழ் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. மாதகல் சென் யோசெப் மகா வித்தியாலய மாணவர்களின் தமிழ் மொழி வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. கலாபூஷணம் ஆ. கனகரட்ணம் வாழ்த்துரை வழங்க செல்லமுத்து வெளியீட்டகத்தின் நிறுவனர் யோ. புரட்சி வரவேற்புரை வழங்க, அரசியல் ஆய்வாளரும் எழுத்தாளருமான லதா கந்தையா இதழின் அறிமுக உரையை ஆற்றவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் (தமிழ் சிறப்பு) டயானா நியூட்டன் இதழ் மதிப்பீட்டுரையை நிகழ்த்த, யாழ்பாவாணன் கலைப்பணி மன்றத்தின் நிறுவனர் யாழ்பாவாணன் நன்றியுரை ஆற்றுவார். இனிய நந்தவனம் இதழின் இதழாசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரை ஆற்றுவார். மாதகல் க. மயூரன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்புகளை மாதகல்வாசி காசி ஜீவலிங்கம் மேற்கொள்கின்றார்.




## அதிகாரப்பகிர்வு... (03ஆம் பக்கத் தொடர்)

இல்லை. 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் அதிகாரப்பகிர்வுக்கான தீர்வை எட்டுவதற்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது.

13ஆவது திருத்தச்சட்டம் இன்னமும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப்பகிர்வை அமுல்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் கருத்துகளை பெற்று அதனை அமுல்படுத்துவதற்கு முற்படும் போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசத்தின் அதற்கு எதிரான கருத்துகளை முன்வைத்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரட்டை வேடத்தை நாட்டுக்கு காண்பித்துள்ளார்.

நிலையான பொருளாதாரத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் அனைத்து மக்களுக்கும் இடையில் சமாதானமும் நல்லிணக்கமும் கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டின் அனைத்து மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கும் வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அதிகாரப்பகிர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் அனைத்து தரப்பு மக்களும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும். அப்போது அனைத்து தரப்பு மக்கள் மத்தியிலும் இலங்கை என்ற உணர்வு கட்டியெழுப்பப்படும்.

அனைத்து பிரிவினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரங்களை பகிர்வதன் மூலமும் சர்வதேச நம்பிக்கையை உருவாக்க முடியும்.

பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்துக்கும், செயற்படும் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கும் மாறுபட்ட கருத்தை கட்சியின் செயலாளர் எந்த அடிப்படையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மனசாட்சிக்கு இணங்க, சிறிதும் புரிந்துகொள்ளாமல் முன்வைப்பார் என்பது விளக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் வேட்பாளர் ஒருவர் முன்வைக்கப்படுவார் என்றும் முடிந்தால் இலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை நாட்டுக்கு நேரடியாக வெளிப்படுத்துமாறும் அக்கட்சியிலுள்ள குறைந்தளவானோர் பல்வேறு கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

## இனத்தை காட்டிக்... (03ஆம் பக்கத் தொடர்)

கதைக்க அருகதையற்றவர்கள். குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்நிகழ்வில் தமிழ் மக்கள் பெருமளவில் கலந்துகொள்வார்கள். எனவே, அதனை தடுக்க வேண்டும் என்ற நோக்கில் சிலர் செயற்படுகின்றனர்.

சிவசேனையினுடைய இலங்கை பிரதிநிதியான சச்சிதானந்தம் குருந்தூர் மலை ஆலயம் தொடர்பாக கருத்து சொல்வதற்கு எந்த அருகதையும் இல்லை. அவர் இந்தச் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்க வேண்டும்.

இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் மத ரீதியாக முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்காக திட்டமிட்ட ரீதியிலே மதவெறி கருத்துகளை சிவசேனை பரப்பி வருகின்றது.

தமிழருடைய இருப்புக்கு நேரடியாக அச்சுறுத்தலாக இருக்கின்ற திட்டமிட்ட பௌத்தமயமாக்கலுக்கு முழுமையாக துணை போகும் விதமாக சச்சிதானந்தத்தின் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

அங்கு அவரோடு சென்றிருந்த சில இந்துசமயத்தை சார்ந்தவர்களும் கூலிக்கு மாரடிப்பவர்களாக, இனத்தை காட்டிக் கொடுப்பவர்களாக செயற்படுகின்றனர். அவர்களும் இந்தச் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும். உரிமைக்காக போராடிய மக்கள் குருந்தூர்மலையை எப்படி பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிப்பர்.

## IMF இன் இரண்டாம் கட்ட ...

செல்லுதல், நேர்மைத்தன்மையை உருவாக்குதல் உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், சாதகமான சில விடயங்கள் இடம்பெற்று வருகின்றன. நாட்டின் பொருளாதாரம் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பி வரும் நிலையில், விரைவில் வாழ்க்கைச் செலவு மேலும் குறைவடையுமென்ற எதிர்பார்ப்பையும், அவர் வெளியிட்டார்.

## GSP + இழக்க நேரிடின்...

டெனிஸ் சைபி தெரிவித்துள்ளார்.

அத்துடன், உலகளாவிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதில் இலங்கை தமது முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவையையும் உள்ளதாகவும், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது இலங்கையை முக்கிய சந்தைகளில் ஒருங்கிணைப்பது ஜி.எஸ்.பி. பிளஸ் எனவும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளாமல் புறக்கணிப்பது நாட்டை குறிப்பிடத்தக்க பாதகத்துக்கு உள்ளாக்கக் கூடும் எனவும், தூதுவர் டெனிஸ் சைபி சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொலிஸ் அதிகாரம் மத்திய...

பரவலாக்கப்படுவதை முஸ்லிம் மக்கள் ஆதரிக்கின்ற போதிலும், 13ஆவது திருத்தம் ஏனைய விடயங்களில் திருத்தப்பட வேண்டுமென வும், அவர் யோசனை முன்வைத்தார்.

மாகாணங்களை இணைப்பதற்கான தத்துவத்தை அகற்றும் வகையில் அரசியலமைப்பின் உறுப்புரை 154 A (03) நீக்கப்பட வேண்டுமெனவும், அமைச்சர் நஸீர் அஹமட், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்தார்.

சட்டம், ஒழுங்கு உள்ளிட்ட அனைத்து பொலிஸ் அதிகாரங்களும் பிரத்தியேகமாக மத்திய அரசாங்கத்திடம் மாத்திரமே ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும், அவரது கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கான அதிகாரப்பகிர்வை முஸ்லிம்கள் ஆதரிக்கின்றனர். ஆனால், குறிப்பாக 13ஆவது திருத்தம் வேறு வகையிலும் திருத்தப்பட வேண்டுமெனவும் அமைச்சர் நஸீர் அஹமட், ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டினார்.

## பொருளாதார ஒத்துழைப்புகளை ...

அகழ்வு ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தி விவசாயத்தில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையே விமானப் பயணத்தை அதிகரிப்பது சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவுமென்பதால், பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கு சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதில் ஒத்துழைக்க வியட்நாம் இணக்கம் தெரிவித்தது.

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் பிராந்திய விரிவான பொருளாதார ஒத்துழைப்பு (RECP) உறுப்பு நாடுகள் உட்பட 60 நாடுகள் 7ஆவது சீன தெற்காசிய கண்காட்சி மற்றும் 27ஆவது சீன குன்மிங் ஏற்றுமதி, இறக்குமதிக் கண்காட்சியில் பங்குபற்றின. இந்தோனேசியா, மியன்மார், நேபாளம் ஆகிய நாடுகளின் உப ஜனாதிபதிகள், வியட்நாம் பிரதி பிரதமர், மாலைதீவு வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் பலருடனும் பிரதமர் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

## நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய ...

தொல்பொருள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் தொல்பொருள் திணைக்களத்தின் விதிகளுக்கமைவாக ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் பொங்கல் பொங்கினர்.

ஒரு இடத்திலேயே நெருப்பு மூட்ட அனுமதி வழங்கப்பட்ட அதேவேளை, ஏனைய பக்தர்கள் பொங்கல் பொங்க அனுமதிக்கப்படவில்லை. ஒரு இடத்தில் நெருப்பு மூட்டி இரண்டு தடவைகள் பானையில் பொங்கல் பொங்கிப் படைத்து வழிபாடுகளை மேற்கொண்டதுடன், பௌத்த பிக்குகள் சிலரால் சிறு குழப்பநிலை ஒன்றும் ஏற்பட்டது. இதனை பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மறுபக்கத்தில் பௌத்த விகாரையில் பௌத்த மக்களாலும் பௌத்த பிக்குகளாலும் சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இரண்டு பகுதிக்கும் இடையில் பொலிஸாரின் பாதுகாப்பு பலமாக போடப்பட்டிருந்தது.

ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் பொங்கல் பொங்கிப் படைத்து பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு பிரசாதங்களை பரிமாறினர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான கந்தையா சிவநேசன், துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என சுமார் 500 பேர்வரை கலந்து கொண்டனர்.

இதேவேளை, பௌத்த விகாரையில் நடைபெற்ற வழிபாடுகளில் விகாரை மற்றும் வவுனியா சப்புமல்கஸ்கட ரஜமக விகாரை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் தலைமையிலான 29 தேரர்கள் மற்றும் சுமார் 300 பேர்வரை மக்கள் கலந்து கொண்டனர்.

## போலி நிதி ஆவணங்கள்...

உண்மைகளை உறுதிப்படுத்தவும் இந்த போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாக தகவல் வெளிவந்துள்ளதாகவும், அத்திணைக்களம் தெரிவித்தது.

வெளிநாட்டு தூதரகங்களில் சில தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான ஆவணங்கள், மத்திய வங்கியின் ஊழியர் ஊழியர் சேமலாப நிதிய திணைக்களத்துக்கு பரிசீலிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது, அதில் போலியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் நிதிய திணைக்களத்தால் அடையாளம் காண முடிந்தது.

ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான போலியான ஆவணங்களை தயாரித்தல் சட்டவிரோதமான செயற்பாடாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களும் ஏனைய அனைத்து நிறுவனங்களும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென அத்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## ஹோமாகமவில் திடீர் தீ விபத்து...

புடவைத் தொழிற்சாலையொன்றிலும் நேற்று முன்தினம் இரவு திடீரென பரவிய தீயினால் தொழிற்சாலைகள் இரண்டும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. தற்போது தீ முழுமையாக கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டதாக, ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தீ விபத்தினால் எரிந்து நாசமான ஹோமாகம, கட்டுவன கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள இரசாயன தொழிற்சாலைக்கு சுற்றாடல் அனுமதி கிடைக்கவில்லையென, மத்திய சுற்றாடல் அதிகாரசபை நேற்று தெரிவித்தது.

நேற்று முன்தினம் (17) இரவு 8.00 மணியளவில் இத்தொழிற்சாலையில் தீ பரவியதாகவும் சுமார் 4 மணித்தியாலங்கள் தீப்பரவல் நீடித்ததாகவும் பொலிஸார், இராணுவத்தினர், தீயணைப்பு படையினர் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீ முற்றாக அணைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைத்தொழில் பேட்டையிலுள்ள பெயின்ட் தொழிற்சாலையும் ஆடை தொழிற்சாலையுமே இவ்வாறு தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு ஹொரணை மற்றும் கோட்டே தீயணைப்பு பிரிவுகளிலிருந்து 7 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டதுடன், பனாகொடை இராணுவ முகாமின் தீயணைப்பு பிரிவு வாகனங்களும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அத்துடன், தீயைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்காக இராணுவத்தினரும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தீ விபத்தில் உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஹோமாகம தீப்பரவல் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நேற்று சம்பவ இடத்துக்கு விரைந்தது. இந்தக் குழுவின் அவதானிப்புகளின் பின்னர், வளி மற்றும் நீர்மாசடைவு தொடர்பாக முடிவுகளை எடுக்க முடியுமென, அக்குழுவின் தலைவர் சுபுன் எஸ்.பத்திரகே தெரிவித்தார்.

அத்துடன், தொழிற்சாலைக்கு அருகில் வசிப்பவர்கள் நீரை பயன்படுத்தும் போது, அவதானத்துடன் செயற்படுமாறும் முகக்கவசங்களை அணியுமாறும், அவர் கோரியுள்ளார்.

இதேவேளை ஹங்குரன்கெத்த, நாரங்கமடில்ல பிரதேசத்திலும் தீ பரவியதாகவும் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

மேலும், உப்புவெளி வெல்கம்வெஹர வனப்பகுதியில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட தீயினால் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## இடமாற்றங்களை பின்பற்றாத ...

இவ்வாறான ஆசிரியர்களில் சிலர் தாம் ஏற்கெனவே கற்பித்த பாடசாலைகளில் சேவைகளில் ஈடுபட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும், கல்வியமைச்சு தெரிவித்தது.

எனினும், சில பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான சேவையின் தேவைப்பாடு காணப்படுவதாகவும் அவர்களை அதே பாடசாலையில் வைத்துக்கொள்வதற்கு அந்தந்தப் பாடசாலையின் அதிபர்கள், கல்வியமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவ்வாறான ஆசிரியர்களுக்கு இந்த தீர்மானம் செல்லுபடியாகாதெனவும், கல்வியமைச்சு மேலும் தெரிவித்தது.

இதேவேளை, அளவுக்கு அதிகமான ஆசிரியர்கள் காணப்படும் பாடசாலைகளிலிருந்து மேலதிகமான ஆசிரியர்களை, ஆசிரியர்கள் தேவைப்படும் பாடசாலைகளுக்கு நியமிக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், கல்வியமைச்சு தெரிவித்தது.

## உள்ளூராட்சி சபைகளில் 25 வீத...

தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கான வாய்ப்புகளை வழங்குவதும் ஜனாதிபதியின் வேலைத்திட்டமெனவும், பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த மேலும் தெரிவித்த போது,

"இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை பற்றி நாங்கள் தொடர்ந்து பேசி வருகிறோம். நம் நாட்டில் பல கலவரங்கள் நடந்துள்ளன. 1971 மற்றும் 1989ஆம் ஆண்டுகளை போலவே, கடந்த காலத்திலும் ஒரு இளைஞர் எழுச்சியைக் கண்டோம்.

ஆனால், 1989ஆம் ஆண்டுக்கு பிறகுதான் நமது நாட்டு இளைஞர்கள் அரசியலுக்கு வருவதற்கான வாய்ப்பு கிடைத்ததுடன், அதற்கு தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இளைஞர் அதிருப்தி ஆணைக் குழுவினால் உள்ளூராட்சிமன்றங்களுக்கு 25 வீதம் இளைஞர்களின் வேட்புமனுக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால், துரதிஷ்டவசமாக கடந்த காலத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக உரிமை வழங்குவதற்கான உள்ளூராட்சி சட்டத் திருத்தத்தின் போது இளைஞர்களுக்கான வாய்ப்பு பறிபோனது.

இதனால் 2018 உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன்படி 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வயதானவர்களே அதிகமாக போட்டியிட்டனர்.

பாராளுமன்றத்தில் இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பாக நாம் பேசினாலும், அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதை காண முடியவில்லை. ஆனால், உள்ளூராட்சிமன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவம் என்பது பல தசாப்தங்களாக நாம் காணக்கூடியதொன்று. அதன்படி, அரசியல் குடும்பப் பின்னணி இல்லாத இளைஞர்கள் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாக பதவி வகித்த சந்தர்ப்பங்களை நாம் பார்த்திருக்கிறோம்.

இளைஞர்களுக்கு 25 சதவீதமான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் உரிமையை இளைஞர்களுக்கு வழங்கும் வகையில் உள்ளூராட்சிமன்ற சட்டத்தில் திருத்தம் செய்யப்படுவதுடன், அவர்களுக்குரிய உரிமையை மீளப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்த பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

தனிநபர் பிரேரணையாக இந்த முன்மொழிவை நான் சமர்ப்பித்தேன். இந்த பிரேரணை கொண்டு வரப்பட்டு நீண்டகாலம் கடந்ததுடன், இந்த விடயங்கள் பாராளுமன்ற அரசியலமைப்பு தெரிவுக் குழுவிலும் அமைச்சரவையிலும் தொடர்ச்சியாக ஆராயப்பட்டது. சில நேரங்களில் தனிநபர் பிரேரணை சட்டமாக மாற மிகவும் கடினமானது என்பதோடு நீண்டகாலம் எடுக்கும்.

இளைஞர் பிரதிநிதித்துவச் சட்டம், அமைச்சரவையில் இரண்டு முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இளைஞர் தினத்தையொட்டி, அடுத்த பாராளுமன்ற அமர்வில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிப்பதற்கான சட்டமூலத்தை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தனிநபர் பிரேரணையை பாராளுமன்றத்தில் சட்டமாக மாற்ற தேவையான ஆதரவை வழங்கியமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதில் அவரது பங்களிப்பை பாராட்ட வேண்டும்.

எமது நாட்டில் நீண்டகாலமாக இருந்துவந்த ஆனால், கடந்த காலத்தில் இரத்துச் செய்யப்பட்ட இளைஞர் பிரதிநிதித்துவத்தை மீளப் பெறுவதற்கு அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய கட்சிகளினதும் ஆதரவு கிடைக்கும் என்று நம்புகிறேன்" எனத் தெரிவித்தார்.

## 02Kg கொக்கேய்னுடன்...

செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, போதைப் பொருள் பெறுவதற்காக விடுதிக்கு காரில் வந்த நபரொருவரும் 7 இலட்சம் ரூபா பணத்துடன் கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

வெளி நாட்டிலுள்ள முக்கிய போதைப்பொருள் வர்த்தகரொருவரின் அறிவுறுத்தலின் பேரில் அவர் இந்த போதைப்பொருட்களை வாங்க வந்ததாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட 28 வயதான பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த நபர் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்க உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், கிருலப்பனையைச் சேர்ந்த 49 வயதுடைய மற்றைய சந்தேக நபரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## வெள்ளவத்தை பகுதி...

ஜெனரேட்டர்களை பயன்படுத்தி, மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, இலங்கை மின்சார சபை தெரிவித்தது. அத்துடன், மின்சார விநியோகத்தை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## 03 பிரிவுகளின் சேவைகளும்...

தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனும் பிரதம செயலாளர்களுடனும் நேற்று முன்தினம் (17) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

மாகாண சபை முறைமையுடன் எதிர்கால நிர்வாக செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"மாகாணசபைகளின் நிர்வாக முறைமை தொடர்பாக கலந்துரையாட நான் உங்கள் அனைவரையும் அழைத்துள்ளேன். மத்திய அரசின் நிர்வாக கட்டமைப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தி, இதனை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பாக ஆலோசிக்க வேண்டும்.

சில சமயங்களில் உள்ளூராட்சிமன்றம், மாகாணசபை, மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளாலும் ஒரே மாதிரியான சேவைகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக வடிகால் வெட்டுதல், மின் கம்பம் நடல், வீதிகள் அமைத்தல் போன்றவற்றை சுட்டிக்காட்டலாம். இவ்வாறு நடப்பதால் பெருமளவு பணம் வீணாகிறது. அப்படியானால், இந்த மூன்று பொறிமுறைகளின் செயல்பாட்டை மையமாகக் கொண்டு ஒரு புதிய பொறிமுறையை அமைக்க வேண்டும். மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு மாதத்துக்கு முன்னர் அதற்கான புதிய பொறிமுறையொன்றை தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

மாகாணசபைகள் இயங்காததாலும், மாகாணசபைகளில் அமைச்சர்கள் இல்லாததாலும் இன்று மாகாணசபை முறைமையில் மாகாண ஆளுநர்களாகிய உங்களுக்கே முழுமையான ஆட்சி அதிகாரம் உள்ளது. மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து, ஒரு மாதத்துக்குள் அதற்கான புதிய கட்டமைப்பை தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

கடந்த ஆண்டு நாம் மிகப்பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டோம். அதை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் அதேவேளையில், நாட்டின் நிர்வாக முறைமையை வழமைக்கு கொண்டுவர வேண்டும்.

குறிப்பாக கீழ்மட்ட சேவைகள் மாகாணசபைகள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகிறன. மாவட்ட அளவிலான சேவைகள் மத்திய அரசின் கீழ் மேற்கொள்ளப்படுகிறன. இந்த சேவைகளை வழங்கும் போது அதிகார போட்டியின்றி கூட்டாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போது நாடு முழுவதும் உணவுப் பாதுகாப்பு திட்டத்தை அமுல்படுத்தியுள்ளோம். அதன்படி, எதிர்வரும் பெரும்போகத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். மேலும், மக்களின் ஊட்டச்சத்து குறைபாடு கடந்த ஆண்டை விட குறைவாக இருந்தாலும், அதில் திருப்தி அடைய முடியாது. 'அஸ்வெசும' திட்டம் நாட்டு மக்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை குறைக்க வழிவகுத்துள்ளது.

குறிப்பாக, பாராளுமன்றம் அடுத்த வருட இறுதிவரை செயற்படும் என்பதால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாணசபை நிர்வாக செயற்பாடுகளில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநருடன் இணைந்து செயல்பட விசேட ஆலோசனைக் குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. குறிப்பாக கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் அந்தந்த மாகாணங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுதல் ஆகிய பணிகளிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் மாகாண மட்டத்தில் சுற்றுலா சபைகளை ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களை ஊக்குவிக்கும் வகையில் பல வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் மாகாண மட்டத்தில் முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது" என ஜனாதிபதி தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்துடன் பணியாற்றும் போது, மாகாணசபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் வகையில் ஜனாதிபதி அலுவலகம் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருப்பதாக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மாகாண ஆளுநர்கள், மாகாண சபைக்குட்பட்ட அதிகார எல்லையில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

## SLFP இன் இரண்டாவது...

ஶ்ரீ லங்கா கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கு இது தொடர்பாக நேற்று முன்தினம் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக இந்நிகழ்வில் பொதுமக்கள் பங்கேற்பதில் நிதி நெருக்கடிகள் உள்ளன. அத்தோடு, இது போன்ற பாரியளவான நிகழ்வுகள் தற்போது நடத்துவது ஏற்புடையதல்லவென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையிலுள்ள ஹோட்டலொன்றில் நிகழ்வை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## 56 வயது பெண்மணியின்...

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி, வடக்கு இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 67ஆவது ஆண்டு விழாவும் காண்டீபன் விளையாட்டுக் கழகத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டியும் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது. இதன்போது, பெண்களுக்கான ஒரு கடல் மைல் தூர நீச்சல் போட்டி நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் 4 பிள்ளைகளையுடைய 40 வயதுடைய பெண் முதலாம் இடத்தையும் 3 பிள்ளைகளையும் 2 பேரப் பிள்ளைகளையுமுடைய 44 வயதுடைய பெண் இரண்டாம் இடத்தையும் 6 பிள்ளைகளையும் 4 பேரப் பிள்ளைகளையுமுடைய 56 வயதுடைய பெண் மூன்றாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

ஒரு கடல் மைல் தூரத்தை நீந்திக் கடந்து இந்த வயோதிபப் பெண்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, ஆண்களுக்கான நீச்சல், படகோட்டப் போட்டிகளும் நடைபெற்றன. ஆயினும், பெண்களுக்கான நீச்சல் போட்டியில் வயோதிபப் பெண்களின் நீச்சல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நீச்சல் போட்டி, பருத்தித்துறை தென்னியம்மன் முனையிலிருந்து இன்பசிட்டிவரை நடைபெற்றது.

# கிழக்கின் குரல்



## மூதூர் ஆற்றங்கரையோரமாக யானை வேலிகள் அமைக்குமாறு வேண்டுகோள்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் ஆற்றங்கரையோரமாக யானை வேலிகள் அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யானைகளால் அப்பகுதி மக்களின் பயிரினங்கள் அழிவடைந்து வருவதாகவும் கிராமமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இக்கிராமங்களில் வசிக்கும் உப்புக்காச்சிமடு மற்றும் இறால்குழி கிராம மக்களின் பாதுகாப்புக் கருதியும் கிராம எல்லைகளில் யானை வேலி அமைக்குமாறு மூதூர் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்திச் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பலவருட காலமாக இவ்விரு கிராமங்களிலும் வசித்து வரும் மக்கள் தென்னை, மா, பலா, கொய்யா உள்ளிட்ட நீண்டகால கனிதரும் மரங்களை நட்டுள்ளதுடன் பல்லின மரக்கறி பயிரினங்களையும் உற்பத்தி செய்து தமது ஜீவனோபாயத்தை கழித்து வருகின்றனர்.

இந்நிலையில் அயல்காடுகளிலிருந்து ஆற்றங்கரை ஊடாக இரவில் யானைகள் பிரவேசித்து பயிரினங்களை அழித்து வருகின்றன. உப்புக்காச்சிமடு கிராமத்தில் வசித்த குடும்பங்களின் இரு குடியிருப்புக்களையும் இவ்வருடம் யானைகள் சேதப்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கிராமங்களை நோக்கி யானைகளின் வருகையை தடுப்பதற்கு யானை வேலிகளை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மூதூர் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்திச் சங்கத்தினால் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



மண்முனைப்பற்று பாலமுனை பிரதேசத்தில் சுற்றுலாத் துறையினரை கவரும் விதத்தில் நடுத்துறை கடற்கரை பூங்கா பார்க் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மண்முனைப்பற்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் சமாதான நீதவானுமாகிய எம். ஏ எம். சியாத் கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடியதன் நிமிர்த்தம் ஆளுநரின் அனுமதிக்கிணங்க இக்கடற்கரை பூங்கா அழகான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் பிறந்தநாளை முன்னிட்டு சமூக நல திட்டங்கள்



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் பிறந்தநாளை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல சமூகநல திட்டங்கள் முன்னெக்கப்பட்டன.

அந்தவகையில் கிழக்கு மாகாணத்தின் பிரதான போதனா வைத்தியசாலையாக திகழும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக இரத்ததான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தனின் 48 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று கட்சி அலுவலகத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் தலைமையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும், மட்டு வவிக்கரை வீதியில் பயன்தரும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டன.

இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டு இரத்தம் தானம் செய்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி தில்ஷிகா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ஆசிரியர்கள் ஒருபோதும் மாணவர்கள் மீது வன்முறையை பிரயோகிப்பதில்லை

### போதைப்பொருள் பாவனை மாணவர்களுக்கு ஆசிரியர்களை எதிரிகளாகியுள்ளது

### நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மாணவர்களை நோக்கி காழ்ப்புணர்வு கொண்ட வன்முறைகளை ஒருபோதும் பிரயோகிப்பதில்லை. அதனால் ஆசிரியர்களை மதிக்கின்ற நிலைமையை மாணவர்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று வலய, ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் நிகழ்வு நேற்று (17) பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவச் செல்வங்கள் என்று விழிப்பதற்கு காரணம் மாணவர்கள் செல்வங்களாகும். நாட்டின் சொத்துக்கள். இவர்கள் தொடர்பாக நான் அடிக்கடி கவலை கொள்கின்ற சில சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அண்மைக்காலமாக மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துவருவது மட்டுமல்லாது போதைப்பொருள் விற்பனையாளர்களாக மாணவர்களே மாறி வரும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது ஆரோக்கியமான விடயமல்ல. போதைப் பொருள் மாபியாக்கள் என்போர் ஒரு சாதாரண மாபியாக்களாக அல்லாமல் சர்வதேச வலைப்பின்னல் ஊடாக இயங்கி வருகின்னர். மாணவர்களை நோக்கி அவர்களின் இலட்சியங்களை அழிப்பதற்காக செயற்பட்டு வரும் கூட்டிணைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். போதை மாபியாக்கள் தங்கள் வியாபாரத்தை மிக இலகுவாக செய்து முடிக்க வேண்டும் என்ற இலக்குடன் செயற்பட்டு வருகின்றனர். இது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். எனவே இவ்வாறான இலக்கு வைக்கப்பட்ட குழுக்களிடம் அவதானமாக இருங்கள். அதனால் தான் அறிவுரை கூறும் ஆசிரியர்களை சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் எதிரிகளாக பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.



ஆசிரியர்களை தாக்குகின்ற அளவுக்கு பிற்போக்கான நிலைமை உருவாகியுள்ளது. இவ்வாறு ஆசிரியர்கள் தாக்கப்படுவதும் பல்வேறு வகையான துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகின்ற நிலைமைகளையும் நாளாந்தம் எம்மால் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு முக்கிய காரணம் நாங்களாகவே உருவாக்கிய சூழ்நிலைகளே. எனவே தான் அன்புக்குரிய மாணவர்களே, நீங்கள் ஆசிரியர்களுக்கு மதிப்பளித்து ஒழுக்க விழுமியங்களில் மேலோங்கி நடப்பீர்களேயானால், உங்களது இலட்சியங்களை இலகுவாக அடைந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

## கந்தளாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கடைகளில் திடீர் பரிசோதனை

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் கந்தளாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் திடீர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர் பி.இராஜேஸ்வரன் தலைமையில் திடீர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பலசரக்கு கடைகள், சந்தைகள், சதோச நிறுவனம், பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் போன்ற இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது உரிய காலத்தில் அளவீட்டு நியமங்கள் செய்யாத 04 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இனிவரும் காலங்களில் நிறுவை அளவை மோசடி மற்றும் நிறுவை அளவை உபகரணங்களை முத்திரையிட தவறிய வர்த்தக நிலையங்களுக்கு எதிராக திடீர் சோதனைகளை மேற்கொண்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக உதவி அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

## கல்முனை பிராந்திய தனியார் வைத்தியசாலைகளில் திடீர் சோதனை

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் இணைந்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள தனியார் வைத்தியசாலைகளில் எழுமாறான பரிசோதனைகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (17) மேற்கொண்டனர்.

திடீர் பரிசோதனையின் போது தனியார் மருத்துவமனைகளில் காணப்படும் மருந்துகளின் விலை, காலாவதித் திகதி, மயக்க மருந்துகளின் பாவனை, களஞ்சியப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் நீண்டநேர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விஜயத்தில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர். மெலிண்டன் கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ. எல்.எம் றிபாஸ், சுற்றுச்சூழல் மற்றும் தொழில்வாண்மை சுகாதாரப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம் பௌசாத் , உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா,பிராந்திய மேற்பார்வை மருந்தாளர் திருமதி இந்திரகுமார் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## காத்தான்குடியில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

காத்தான்குடியில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்று நேற்று நடைபெற்றது.

காத்தான்குடி பள்ளிவாசல், முஸ்லிம் நிறுவனங்கள் மற்றும் சகல அமைப்புக்களுடனும் இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர். காத்தான்குடி முகைதீன் பெரிய மெத்தை ஜும்மா பள்ளிவாசல் மற்றும் புதிய காத்தான்குடி அக்சா ஜும்மா பள்ளிவாசல் ஆகியவற்றிலிருந்து ஆரம்பமான பாரிய கண்டன ஆர்ப்பாட்டமும் பேரணியும் காத்தான்குடி குர்ஆன் சதுக்கத்துக்கு வந்து போதைப்பொருளுக்கு எதிராக சத்தியபிரமாணம் செய்தனர்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் ,அரசியல் பிரமுகர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள் என பல்லாயிரக்கணக்கான மக்கள் சத்தியபிரமாண நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் போதை வஸ்து பாவனை மற்றும் போதைப்பொருள் விற்பனை என்பன அதிகரித்துவருகின்றது. எனவே போதைப்பொருளிலிருந்து மீட்டெடுக்கும் முகமாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## பிரித்தானிய குற்றவியல் சட்டங்களுக்கு மாறாக மூன்று புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்

### அமித்ஷா அறிவிப்பு

இந்தியாவை பிரித்தானியா ஆட்சி செய்த காலத்தில் இருந்து இன்றுவரை நடைமுறையில் உள்ள குற்றவியல் சட்டங்களை அகற்றி மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை இந்திய அரசு அறிமுகம் செய்யவுள்ளது. கடந்த வருடம் இந்தியப் பிரதமர், பிரிட்டிஷ் அடிமைத்தனத்தின் இறுதி எச்சங்களையும் அகற்றுவோம் என்ற கூற்றுக்கு இணங்க இவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக, இதற்கான மசோதாக்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா குறிப்பிட்டார்.

1860 இல் கொண்டுவரப்பட்ட இந்திய குற்றவியல் தண்டனை சட்டம், 1827 இல் அறிமுகமான இந்திய சாட்சியச் சட்டம் மற்றும் 1898இல் நடைமுறைக்கு வந்த குற்றவியல் நடைமுறைச் சட்டம் என்பனவே வழக்கில் இருந்து நீக்கப்படவுள்ளன. பதிலாக, பாரதீய நியாய சங்ஹித, பாரதிய சாக்ஷியா சவ்ஹித மற்றும் பாரதிய நாகரிக சுரக்ஷா சங்ஹித ஆகிய மூன்று குற்றவியல் தொடர்பான சட்டங்களே நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளன. இப்புதிய சட்டங்கள் அமுலுக்கு வந்ததும் மூன்று வருட காலத்துக்குள் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பாராளுமன்ற நிலையியல் குழுவின் பரிசீலனையின் பின்னர் திருத்தங்களுடன் அடுத்த பாராளுமன்ற கூட்டத் தொடரில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 05 வர்த்தகர்களுக்கு எதிராக அபராதம்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஜூலை மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 05 இலட்சத்தி 70 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்ற நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 95 சுற்றிவளைப்புகளில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 76 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 05 இலட்சத்தி 70 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

கூடுதலான விலைக்கு முட்டை விற்பனை செய்தல், அத்தியாவசியப் பொருட்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாக அவர் தெரிவித்தார். நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதலான தொகைக்கு இரத்தமாதிரி பரிசோதனை அறிக்கையை வழங்கிய இரு மருத்துவ ஆய்வு கூட உரிமையாளர்களுக்கு தலா 01 இலட்சம் ரூபாவும், கூடுதலான விலைக்கு கோழி முட்டை, அரிசி விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு தலா 01 இலட்சம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.அத்தியவசிய பொருட்களை கூடுதலான விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ஆம் இலக்கத்துக்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்துக்கு தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## டோர்னியர் கடல் கண்காணிப்பு விமானம் இலங்கையிடம் கையளிப்பு

### கட்டுநாயக்க வைபவத்தில் இந்தியத் தூதுவர் சாகலவிடம் கையளித்தார்

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய அரசு கடல்சார் கண்காணிப்பு விமானமொன்றை கடந்த 16ஆம் திகதி இலங்கைக்கு வழங்கியது.

கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் இவ்விமானத்தை இந்திய தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதியின தேசிய பாதுகாப்புக்கான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்னாயக்கவிடம் இந்த டோர்னியர் கண்காணிப்பு விமானத்தை வழங்கினார்.

கடந்த வருடம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட கண்காணிப்பு விமானம் ஒரு வருட காலத்தின் பின் சீர் செய்யப்படுவதற்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட நிலையிலேயே இந்த டோர்னியர் 228 விமானம் இரண்டு வருடகால பாவனைக்காக இந்திய கடற்படையில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பயனாகவே கண்காணிப்பு விமானமொன்றை வழங்க இந்தியா தீர்மானித்தது.

டோர்னியர் விமானம் கடற்கரை, கடற்கரையை ஒட்டிய பகுதிகள் மற்றும் பொருளாதார வலய பகுதிகளை கண்காணிப்பதற்காக இலங்கை விமானப் படை பயன்படுத்தி வருகிறது.

# கண்டி நுவரெலியா மாவட்டங்களுக்கு தடையின்றி குடிநீர்விநியோகம்

## அமைச்சர் ஜீவன்–ஆளுநர் லலித் யூ.கமகே இடையில் விசேட கலந்துரையாடல்



மத்திய மாகாணத்தில் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் நகர, கிராம பகுதிகளுக்கு வழங்கப்படும் நீர் இணைப்புகள் , நீர்வழங்கல், வடிகாலமைப்பிலுள்ள குறைப்பாடுகள், சுகாதார பாதுகாப்பான தடையின்றிய நீர்விநியோகம் போன்ற விடயங்கள் தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

மத்திய மாகாணத்தில் நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் நகர, கிராம பகுதிகளுக்கு வழங்கப்படும் நீர் இணைப்புகள் குறித்து மத்திய மாகாண ஆளுநருடன், அமைச்சர் ஜீவன் தொண்டமான் கலந்துரையாடியுள்ளார்.

இதற்கான தீர்வு பொறிமுறையை தயாரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி பேசப்பட்டு, தீர்மானங்களும் எட்டப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும், மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகே. இடையிலான கலந்துரையாடலொன்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே நீர்வழங்கல் குறித்து ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது உள்ளூராட்சிசபைகளின் அதிகாரம், ஆளுநர் வசம் இருப்பதால், கண்டி, நுவரெலியாவிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் துறைசார் அதிகாரிகளிடம் இது பற்றி பேச்சுவார்த்தை மக்களுக்கு தடையின்றி நீரை வழங்குவதற்கும் இங்கு தீர்மானம் எட்டப்பட்டது.

இதன்போது, மத்திய மாகாண தமிழ்க் கல்வி பிரிவில் நிலவும் பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வு வழங்கப்படும் என்மை' ஆளுநர் அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார். மேலும், இதற்கான விசேட சந்திப்பொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மத்திய மாகாணத்தில் தமிழ்க் கல்வி பிரிவில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் எடுத்துரைக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள விசேட சந்திப்பின் போது இப்பிரச்சினைக்கு தீர்வு காண இணக்கம் காணப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் அமைச்சின் செயலாளர் வருண சமரதிவாகர, நீர்வழுங்கல் அதிகாரசபை நிஷாந்த ரணதுங்க, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, புதிய கிராமங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் ரூபதரஷ்ன், நீர்வழங்கல் சபையின் பொது முகாமையாளர் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## தாயுடன் தனிமையில் வாழ்ந்த மாணவி திடீர் மரணம்

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

எம்பிலிபிட்டி இந்துனில்புர பிரதேசத்தில் வறிய குடும்பத்தைச் சேர்ந்த 16 வயது பாடசாலை மாணவியொருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

பாடசாலை மாணவி சுகயீனமான தாயுடன் தனிமையில் வாழ்ந்துவந்துள்ளார்.

இந்நிலையிலேயே அவரது வீட்டிலிருந்து மாணவியின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த இந்த மாணவி தந்தையின் மரணத்துக்கு பின்னர் தாய் மற்றும் சகோதரனுடன் குடிசை வீட்டில் வசித்து வந்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் இவருடைய சகோதரனும் இதே நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதனைதொடர்ந்து மாணவியும் தாயும் அவ்வீட்டில் தனிமையில் இருந்துள்ளனர்.

செவனகலலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மலைச்சாரல்

## ஊவாவில் கடும் வரட்சி வன விலங்குகள் பாதிப்பு

*ஊவா சுழற்சி நிருபர்*



நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக ஊவா மாகாணத்திலுள்ள பிரதான குளங்கள், நீர்நிலைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. குறிப்பாக சரணாலயம், அரசவனப்பகுதி போன்ற இடங்களிலுள்ள நீர்நிலைகளின் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் அப்பகுதிலுள்ள மிருகங்கள், பறவைகள் போன்றவற்றுக்கு பெரும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாகவும் வன இலாகா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் .

யால சரணாலயத்தில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு வன இலாகா அதிகாரிகள் தற்காலிக நீர் தொட்டியமைத்து தினமும் பவுசர் மூலம் நீர் நிரப்பி வருகின்றனர். அவுஸ்திரேலியா மற்றும் இந்தியாவின் ஹிமாலயா பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட பெயின்ஸ் ஸ்டொக் (Paint Stroke) எனப்படும் ஒரு வகை வெளிநாட்டு கொக்கு இன பறவைகள் ஜூலை மாதம் முதல் செப்டம்பர் வரையான காலப்பகுதிகளில் இலங்கை நோக்கி படையெடுத்து வருவதும் காலங்காலமாக இடம்பெற்று வருகின்றன. அதேவேளை ஊவா மாகாண எல்லைப்பகுதியான புத்தள,கோணகங் ஆர, தம்பகொடா ஆர, தம்ஆர போன்ற சதுப்பு நிலம் மற்றும் குளக்கரைகளில்

இத்தினங்களில் இப்பறவை இனங்கள் தன் குஞ்சிகளுடன் கூட்டம் கூட்டமாக இரை தேடிவதையும் இரவு நேரங்களில் குளக் கரையிலுள்ள மர உச்சிகளில் கூடு கட்டி தங்கி வருவதையும் காணமுடியும்.

## பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு கோரிக்கை

*பலாங்கொடை தினகரன் நிருபர்*

பலாங்கொடை இராசகலை நகரை மையப்படுத்தி பொலிஸ் காவலரண் ஒன்றை பெற்றுத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராசகலை நகருக்கு நாளாந்தம் பெருந்திரளான மக்கள் வருகை தருவதாக வும் இந்நகரத்தை அண்மித்து பல கிராமங்கள் அமைந்துள்ளதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பொதுமக்கள் பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு இராசகலை பிரதேசமும் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# துரக்கந்த பிரதேசத்துக்கு புதிய பஸ்சேவை ஆரம்பம்

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

பலாங்கொடை நகரிலிருந்து துரக்கந்த பகுதிக்கு புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இரத்தினபுரி மாவட்ட

இணைப்பு குழுத் தலைவருமான அகில எல்லாவளவின் ஏற்பாட்டில் பலாங்கொடை இலங்கை போக்குவரத்து டிப்போவினால் இந்த போக்குவரத்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே பலாங்கொடையிலிருந்து இராசகல ஊவெல்ல வரையில் போக்குவரத்து சேவை நடைபெற்று வந்த போதிலும் அவ்விடத்தில் இருந்து துரக்கந்த வரையில் வீதி பழுதடைந்து காணப்பட்டது.

இதனால் இவ்வீதியை காபட் செய்து அபிவிருத்தி செய்ய பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள நடவடிக்கை மேற்கொண்டதுடன் அவ்விடத்தில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள துரகந்த பகுதிக்கான புதிய பஸ் சேவையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனால் நீண்டகாலமாக மக்கள் எதிர்நோக்கிவந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள் போக்குவரத்து வசதி இன்மையால் அனுபவித்து வந்த கஷ்டங்கள் நீங்கியுள்ளதாகவும் பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.



பண்டாரவளை வீதியில் பங்கெட்டிய தோட்ட வைத்தியசாலை வளாகத்தில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர்களால் அப்பகுதி மக்களின் நலன்கருதி கருங்கற்களால் கட்டப்பட்ட பிரேத அறையின் இன்றைய தோற்றத்தை படத்தில் காணலாம். இப்பிரேத அறை தற்போது கவனிப்பார் அற்று காடு மண்டியிருப்பதையும் படத்தில் காணலாம். (படம்; ஊவா சுழற்சி நிருபர்)

## வடக்கின் உதயம்



யாழ்ப்பாணம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவம் நேற்றையதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அதனைதொடர்ந்து 12 நாட்களுக்கு மகோற்சவ திருவிழாக்கள் நடைபெற்று, 28ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது. (படம்; யாழ்.விசேட நிருபர்)

# குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகள்

*மாங்குளம் குருப், ஓமந்தை நிருபர்*

பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனாருக்கு விசேட பொங்கல் வழிபாடுகள் நேற்றைய தினம் நடைபெற்ற அதேவேளை குருந்தூர் மலையில் அமைந்துள்ள விகாரையிலும் பௌத்த பிக்குகளால் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இரண்டு பகுதிக்கும் இடையில் விசேட பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

இதேவேளை பௌத்த விகாரையில் நடைபெற்ற வழிபாடுகளில் வவுனியா சப்புமல்கஸ்கட ரஜமாக விகாரை விகாராதிபதி கல்கமுவ சாந்தபோதி தேரர் தலைமையிலான 29 தேரர்கள் மற்றும் சுமார் 300 பேர் வரையிலான மக்கள் கலந்து கொண்டனர்.



# கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற பிரச்சினைகளை ஆராயும் கலந்துரையாடல்

*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளின் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடலொன்று காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மீள்குடியேற்ற பகுதிகளான பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் இடம்பெறுவரும் கண்ணிவெடி அகற்றல் தொடர்பான விடயங்களை கண்ணிவெடி அகற்றும் நிறுவன அதிகாரிகள் இதன்போது விளக்கமளித்திருந்தனர்.

மேலும், அப்பகுதிகளில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு முன்னேற்பாடாக துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் அடுத்த வாரத்தில் அப்பகுதிகளுக்கு கள விஜயமொன்றை முன்னெடுப்பதாகவும் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

அப்பகுதிகளிலிருந்து கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாக 172 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. அவற்றில் 65 குடும்பங்களை மீள்குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதி செயலணியின் வட கிழக்கு அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் மேலதிக செயலாளர் எல். இளங்கோவன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) நளாஜினி இன்பராஜ், திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டு மையத்தின் அதிகாரிகள், இராணுவ கண்ணிவெடி அகற்றல் பிரிவின் அதிகாரிகள், SHARP, MAG, RAHAMA, DASH, UNDP, OfERR CEYLON, SHARP, The HALO Trust ஆகிய நிறுவன அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.



யாழ். ஒஸ்மானியா கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் பற்றி புதிய அதிபருடன் கலாபூஷணம் யாழ். பரீட் இக்பால், சமூக ஆர்வலர்களான சனூன் மொஹமட் நாஸர், ஹாமீம் சுவைஸ் ஆகியோர் கலந்துரையாடிய போது எடுத்த படம்.

## வேலணை பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழா

*யாழ். விசேட நிருபர்*

வேலணை பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழா நிகழ்வு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை பிரதேச செயலரும் பிரதேசத்தின் பண்பாட்டு பேரவையின் தலைவருமான கைலாயபிள்ளை சிவகரன் தலைமையில் வேலணை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாதசுந்தரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் மதத்தலைவர்கள் ஆசியுரை வழங்கியிருந்தனர்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகம், பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்திய பண்பாட்டு பெருவிழா நிகழ்வில் வேலணை பிரதேசத்தைச் சேர்ந்த 13 கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு நினைவு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# தேங்காய் மட்டைகளுக்குள் மறைத்து தேக்கு மரக்குற்றிகள் கடத்தல்



*சாவகச்சேரி விசேட நிருபர்*

தேங்காய் மட்டைகளால் மறைத்து மிகவும் சூட்சுமமான முறையில் கொண்டுச் செல்லப்பட்ட தேக்கு மரக்குற்றிகளை நேற்று சாவகச்சேரிப் பொலிஸார் முறியடித்ததுடன் சந்தேக நபரொருவரையும் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சிறிய ரக லொறியில் தேங்காய் மட்டைகளால் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட தேக்கு மரக்குற்றிகளை சாவகச்சேரி நகரில் விசேட கடமையில் நின்றிருந்த பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது மரக்கடத்தலில் ஈடுபட்ட நபர் தப்பித்துச் செல்ல முயற்சித்த போது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் முல்லைத்தீவைச் சேர்ந்த 33 வயதானவர் என தெரியவருகின்றது.

மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரங்களே இவ்வாறு சூட்சுமமான முறையில் கடத்தப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியலமைப்புக்கான 13 வது திருத்தமும் அது தொடர்பான முஸ்லிம் சமுதாயம் சார்ந்த சில கண்ணோட்டங்கள்

**13 ஆவது திருத்தத்தினை அமுல்படுத்துவது தொடர்பில் அமைச்சர் அஹமட் நஸீர் அஹமட் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை,..**

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தினை அமுல்படுத்துவது தொடர்பாக அமைச்சர் அஹமட் நஸீர் அஹமட் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

13 ஆவது திருத்தத்தினை அமுல் படுத்துவது தொடர்பாகப் பாராளு மன்றத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களைக் கோரியமைக்காக நாம் உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம்.

அது தொடர்பான கருத்துக்கள்,...

★இலங்கை வாழ் முஸ்லிம் சமுதாயத்தினதும் சிங்களச் சமுதாயத்தினதும் சமமானதும் ஒப்புரவுமிக்கதுமான பங்கேற்பின்றி, 13 வது திருத்தத்தின் அமுல்படுத்தலின் மூலமோ அல்லது வேறு எதன் மூலமோ வட கிழக்கு மாகாண மக்களின் இருப்பியல் இனத்துவப் பிரச்சினைகளுக்காகக் கொண்டுவரப்படும் எத்தீர்வும் ஒரு போதுமே நீடித்த நிலைபேறான ஒரு தீர்வாக அமையாது.

★தாய்த்திருநாட்டைத் துண்டாடுவதற்குத் துணை போகவில்லை என்ற ஒரே காரணத்திற்காகத் தம் உயிர்களையும் உடைமைகளையும் இழந்து, ஏதிலிகளாக, நட்டாற்றில் விடப்பட்ட முஸ்லிம் சமுதாயம் எதிர்நோக்கும் ஆயிரக்கணக்கான பிரச்சினைகளை எல்லாம் கிஞ்சித்தும் கருத்திற் கொள்ளாது புறக்கணித்து, ஒரு சமுதாயத்திற்கு மாத்திரமே பரிவுகாட்டும் இந்த அணுகுமுறை அதிர்ச்சிமிக்கதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் பாகுபாடுமிக்கதாகவும் நோக்கப்படுகின்றது. இந்த இரண்டு மாகாணங்களிலும் வாழும் அனைத்துச் சமுதாயங்களையும் அலைக்கழிக்கும் இனத்துவம் சார்ந்த சமயம் சார்ந்த பிரச்சினைகளுக்கு நின்று நிலைக்கும் தீர்வினைக் காண்பதற்கு, மூன்று சமுதாயங்களுக்கும் சமமானதும் சீரானதுமான அந்தஸ்தினை வழங்கும் பாகுபாடற்றதும் உரிய விதிமுறைகள் அனைத்தையும் தழுவிச் செல்கின்றதுமான அணுகுமுறையினைச் சனாதிபதி ஏற்று நடைமுறைப்படுத்துவது அவரின் தலையாய



கடமை என எம்மிடம் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

★வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகாரம் பரவலாக்கப்படுவதை முஸ்லிம்கள் ஆதரிக்கின்றனர், ஆனால், குறிப்பாக, 13 ஆவது திருத்தம் ஏனையவற்றின் மத்தியில் திருத்தப்பட வேண்டும்.(அ)மாகாணங்களை இணைப்பதற்கான தத்துவத்தினை அகற்றி அரசியலமைப்பின் உறுப்புரை 154அ(3) நீக்கப்பட வேண்டும்,

(ஆ)(i) மாகாண சபைகளின் 2/3 பெரும்பான்மைத் தீர்மானத்தின் ஒத்திசைவுடன் மாத்திரமே எந்த மாகாணத்திலும் அனைத்துக் காணி மற்றும் காணித் தீர்வுத் தத்துவங்கள் நிறைவேற்றப்படும் எனும் ஏற்பாட்டிற்கு உட்பட்டும் (ii) 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் மாகாணத்தின் இனத்துவ சமய மக்கள் தொகை விகிதாசாரத்தினை மீறாதிருத்தல் எனும் ஏற்பாட்டிற்கு உட்பட்டும் 'காணி மற்றும் காணித் தீர்வுத் தத்துவங்களை முற்றுமுழுவதுமாக மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

★வட மாகாண சபை இயங்கிய காலத்தில் கருத்தில் கொள்ளத் தவறிய, அனைத்து வடக்கு முஸ்லிம்களினதும் மீள்குடியேற்றத்தினையும் அரசாங்கம் உடனடியாக முன்னெடுக்க வேண்டும், மேலும் யுத்தத்தின் போது துரத்தியடிக்கப்பட்ட முஸ்லிம்களின் காணிகளும் சொத்துக்களும் அவர்களிடமே மீள ஒப்படைக்கப்பட வேண்டும், முஸ்லிம்களுக்கெதிரான எவ்வடிவிலானதும் எவ்வகையிலானதுமான சகல பிரசாரங்களும் நிறுத்தப்பட வேண்டும், இரண்டு மாகாணங்களிலும், அதி விசேட அவசர சூழ்நிலைகளைத் தவிர, வேறு எச்சந்தர்ப்பங்களிலும் ஆயுதப் படைகளின் எண்ணிக்கையினையும் வகிபாத்திரத்தினையும் குறைக்க வேண்டும், உண்மையான கலந்தாலோசிப்புச் செயன்முறை மூலம் சகல இனத்துவ சமயச் சமுதாயங்களின் மத்தியிலும் ஐக்கியத்தினையும் சமாதானத்தினையும் சௌஜன்யத்தினையும் நிலைநாட்ட வேண்டும்.

★கிழக்கு மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம் கிராமத்தவர்கள், குறிப்பாக எல்லைக் கிராமத்தினைச் சேர்ந்தவர்கள் முற்று முழுவதும் விரட்டியடிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் கிராமங்களுக்கு மீளத் திரும்ப வராமல் அவர்கள் தடுக்கப்படுகின்றனர். இந்த முஸ்லிம்கள் அவர்களின் சொந்தக் கிராமங்களிலேயே பூரணமாக மீளக் குடியேற்றப்பட வேண்டும்.

★ எந்த மாகாணத்திற்கும் கிடைக்கும் சகல வெளிநாட்டு ஆதாரமும் உதவிகளும் அரசாங்கத்தின் ஒத்திசைவுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுடன், பாகுபாடின்மை மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்புப் போன்ற அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு உட்பட்டே அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

★அரசியலமைப்பின் நன்கு நிலைபெற்ற 4, 5, மற்றும் 6 ஆம் ஏற்பாடுகளின் திருத்தம் போதிய அளவு விளக்கப்படவில்லை என்பதுடன் நியாயமான நியாயப்படுத்தல்கள் இன்றி அதற்கு ஆதரவு வழங்கப்பட முடியாது.

★சர்ச்சைக்குரிய, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை இயற்றுவதென்பது முற்றுமுழுவதும் அவசியமற்றதாக உள்ளது. ஏனெனில், கொடிய பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் இருந்து நாம் கண்கூடாகக் கண்டதைப் போன்று, பயங்கரவாதத்தினைக் கட்டுப்படுத்துவதில் இது போன்ற சட்டங்கள் ஒரு போதுமே வெற்றியளிக்கவில்லை. நீதிமன்றங்கள் உள்ளிட்ட, தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களினால் நாட்டின் நீதியான, நியாயமான மற்றும் பாகுபாடற்ற ஆளுகை மூலம் மாத்திரமே பயங்கரவாதத்தினை இல்லாதொழிக்க முடியும். இவ்வாறான சட்டங்கள் அதீத துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு, சிறுபான்மையினரை நசுக்குவதற்காக அவை ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டு ஈற்றில் அது பாரிய அடிப்படைவாதத்திற்கு இட்டுச்சென்று நல்லிணக்கத்தினையும் சேதப்படுத்தியுள்ளது என்பதே உலகளாவிய நோக்காக இருக்கின்றது. நாடு அதன் பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழ வேண்டுமாயின், இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

# 'இனிய நந்தவனம்' இலக்கிய சஞ்சிகை கண்டியில் வெளியீட்டு விழா



















புரவலர் ஹாசிம் உமரின் அனுசரணையில் கண்டி இலக்கிய நண்பர்கள் கழகம்,மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடாத்தும் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'இனிய நந்தவனம்' சஞ்சிகையின் இலங்கை இலக்கிய சிறப்பிதழ் வெளியீட்டு விழா கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது.நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே.இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்காநாயக்க தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், முத்தையா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துக்கொண்டனர். கண்டி முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் துரை. மனோகரன் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரையை மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவையின் செயலாளர் எம் .எம்.பீர்முகமது, கவி வாழ்த்தை கவிஞர் ரஷித் எம்.றியாழ், நூல்கருத்துரைகளை தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர்,ஞானம் இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன், விமர்சகர் ரா.நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். ஏற்புரையை இனிய நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரனும் நன்றியுரையை கண்டி எம்.தீபன் ஆற்றினார். இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தகர் சங்கம், முஸ்லிம் வர்த்தக சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

படங்கள்: இக்பால் அலி, நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# 'இனிய நந்தவனம்' இலக்கிய சஞ்சிகை அறிமுக விழா

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**

காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் நடாத்தும் இந்திய தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் இலக்கிய சஞ்சிகையின் இலங்கைச் சிறப்பிதழின் அறிமுக விழா திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இஸ்லாமிய இலக்கிய கழகத் தலைவர் கவிமாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவும் முதன்மை விருந்தினர்களாக பண்பாட்டு அலுவலக திணைக்கள மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயசிறீதரும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலி பரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் சிறப்பு அதிதிகளாக முன்னாள் நகர முதல்வர் அல்ஹாஜ் எஸ்.எச்.எம். அஸ்பர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கவிஞர் ரி. மலர்ச்செல்வன், காத்தான்குடி கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். ஜவாஹிர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதன்மை பிரதியை மட்டு. மாவட்ட சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் பணிப்பாளர் தேசபந்து அல்ஹாஜ் ஏ.எல். மீரா சாகிபு பெற்றுக்கொள்வார்.



சிறப்பு பிரதிகளை, மட்டக்களப்பு ஜாமியுஸ் ஸலாம் ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் கலாநிதி அல்ஹாஜ் எம்.எச். எம். சியாம், இஸ்லாமிய இலக்கிய கழக பொருளாளர் கவிஞர் எச்.எம். இக்பால் கான், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிரானி பிரதீபன் ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள்.

இந்நிகழ்வில் தலைமையுரை, வரவேற்புரையைத் தொடர்ந்து கவிஞர் செங்கதிரோனின் சஞ்சிகை விமர்சனம், இலக்கியச் செம்மல் இல்மி அஹமட் லெவ்வையின் வாழ்த்துக் கவிதையும் இடம்பெறும்.

தொடர்ந்து தே. செந்தில்வேலவரின் சிறப்புரை, கவிமேகம் அஜீரா ஹலீல்தீனின் கவிதை, அதிதி உரை, கலைமதி எம்.ஏ.சி. றபாய்தீனின் கவி வாழ்த்து, பிரதம அதிதி உரை, நந்தவனம் சந்திரசேகரனின் (இந்தியா இனிய நந்தவனம் சஞ்சிகை பிரதம ஆசிரியர்) ஏற்புரையும் இடம்பெறும்.கவிமேகம் ஏ.எல்.எம். சப்ரி (அதிபர்) இந்நிகழ்வைத் தொகுத்து வழங்குவார்.

# இலங்கையின் மிகச் சிறந்த வலைத்தளமாக மகுடம் சூட்டப்பட்ட Combank.lk




கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை வலைத்தளம், 2023ல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட இணைய இராச்சியங்களின் கீழ் மிகச் சிறந்த வலைத்தளத்திற்காக நடத்தப்பட்ட போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது. ஒட்டு மொத்த வெற்றியாளர் மற்றும் சிறந்த வங்கித்துறை மற்றும் நிதி இணையம் என்பனவற்றுக்காகவே இந்த தங்க விருதுகள் வெல்லப்பட்டுள்ளன. இந்த வர்த்தக வகைப்படுத்தலின் கீழ் கொமர்ஷல் வங்கி உயர் விருதை தொடர்ந்து இரண்டாவது வருடமாக வென்றுள்ளது.

சிறந்த வலைத்தளம் என தரப்படுத்துவதற்காக விரிவான வகைப்படுத்தல்கள் பாவிக்கப்பட்டுள்ளன. செயற்பாடுகள், இலகுவான பாவனை, இணக்கம், தொழில் தர முறைகள் மற்றும் நெறிமுறைகளுடனான இணக்கப் போக்கு, செயல்நிலை ஆற்றல், பாதுகாப்பும் தனியுரிமையும், வடிவமைப்பு அழகியல், உள்ளடக்க தரம், பாவனையாளர்களுடன் ஒன்றிணையும் தரம் என மிக விரிவான தொழில்நுட்ப அம்சங்கள் இதன் போது கவனத்தில் கொள்ளப்பட்டன. சிறந்த இணையத்துக்கான இந்த 13வது பரிசளிப்பு விழா மொனார்ச் இம்பீரியலில் ஆகஸ்ட் 9ம் திகதி இடம்பெற்றது.

# சிறந்த 100 பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் வரிசையில் அமானா வங்கி 14 ஸ்தானங்கள் முன்னேறியது



LMD பிரான்ட் ஃபினான்ஸ் இலங்கையின் சிறந்த 100 பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் தரப்படுத்தல் வரிசையில் அமானா வங்கி 14 ஸ்தானங்கள் முன்னேறியிருந்தது. ஒரு வருட காலப்பகுதியினுள் 81 ஆம் இடத்திலிருந்து 67ஆம் இடத்துக்கு முன்னேறியிருந்ததனூடாக, அமானா வங்கியின் அதிகரித்துச் செல்லும் கீர்த்தி நாமம் மற்றும் உறுதியான வர்த்தக நாம ஏற்றுக் கொள்ளல் போன்றன மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

சவால்கள் நிறைந்த ஆண்டில், மாற்றமடைந்த சந்தை நிலைகளுக்கமைய தமது செயற்பாடுகளையும் மாற்றியமைத்து மீண்டெழுந்திறனை வெற்றிகரமாக வெளிப்படுத்தியிருந்த அமானா வங்கி, நேர்த்தியான வர்த்தக நாம பெறுமதி வளர்ச்சியை பதிவு செய்திருந்த சில வர்த்தக நாமங்களில் ஒன்றாக திகழ்ந்து சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்தியிருந்ததிலும் கவனம் செலுத்தியிருந்தது.

LMD பிரான்ட் ஃபினான்ஸ் "மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் தரப்படுத்தல்" என்பது சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற வர்த்தக நாம மதிப்பிடல் ஆலோசனை அமைப்பான பிரான்ட் ஃபினான்ஸ் உடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

இந்த தரப்படுத்தல் செயன்முறையில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிதித் தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து தரவுகளை பெற்றுக் கொள்ளல் போன்றன அடங்கியுள்ளன. Bloomberg தரவுகளின் அடிப்படையில் சந்தை நிலைகள் கணிப்பீடு செய்யப்படுவதுடன், 2500 பதிலளிப்போரின் கருத்துக் கணிப்புகளினூடாக நுகர்வோர் உணர்நிலைகள் அளவீடு செய்யப்படுகின்றன.

மேலும், வங்கியியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் தொழிற்துறைகளில் வியாபாரத்துக்கு வியாபாரம் (B2B) அடிப்படையிலான மேலதிக ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு, கூட்டாண்மை தீர்மானமெடுப்போரின் வியாபார உணர்வுகள் புரிந்து கொள்ளப்பட்டுகின்றன.

## தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

# மொரவக்கா கிளைக்கான புதிய தங்கக் கடன் மத்திய நிலையத்தை ஆரம்பித்த HNB FINANCE



இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC இன் 59ஆவது தங்கக் கடன் மத்திய நிலையம், இல. 7, நில்வல கட்டிடம், மொரவக்கவில் HNB FINANCEஇன் மொரவக்க கிளை வளாகத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் மற்றும் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் உட்பட பெருமளவிலான மக்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மொரவக்க, பிட்டபெத்தர மற்றும் தெனியாக உள்ளிட்ட பகுதிகளின் தங்கக் கடன் சேவைகளுக்கான தற்போதைய தேவைக்கு தீர்வாக, நிறுவனம் இந்த புதிய HNB FINANCE தங்கக் கடன் மத்திய நிலையத்தை நிறுவியுள்ளது. Gold Loan, Gold Plan மற்றும் VIP Gold Loan சேவைகள் வாடிக்கையாளர்களின் தேவைகளை துல்லியமாகக் கண்டறிந்து, நிதி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த தங்கக் கடன் தீர்வுகள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி கூறலாம். HNB FINANCE தங்கக் கடன் சேவையானது மூன்று நிமிடங்களில் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ஒரு பவுன் தங்கத்திற்கான அதிகபட்ச முன்பணத் தொகையைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. இந்த புதிய தங்கக் கடன் சேவை அலகு, தவணை முறையில் பணம் செலுத்தும் திறனுடன் நம்பகமான கொடுக்கல் வாங்கலை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வாக இருக்கும்.

# 42ஆவது ஆண்டு விழாவினை பசுமையுடன் கொண்டாடிய Orient Finance PLC




இலங்கையில் முன்னணி வகிக்கும் நிதி நிறுவனமான Orient Finance PLC தமது 42ஆவது ஆண்டு நிறைவினை அண்மையில் பெருமையுடன் கொண்டாடியது. இந்நாளை நினைவுகூறிடும் வகையில் பசுமைமிகு எதிர்காலத்திற்கு பங்களிப்பு செய்திடும் நோக்கத்துடன் மரக்கன்றுகளை நடும் திட்டத்தினை ஆரம்பித்ததன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான தமது உறுதிப்பாட்டை மேலும் உறுதி செய்துள்ளது. முதற்கட்ட நடவடிக்கையாக வனாதவில்லுவையிலிருந்து அனுராதபுரம், கிளிநொச்சி மற்றும் மன்னார் வரை பரந்து விரிந்துள்ள பழைமையான வில்பத்து வனப்பகுதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 6000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இம்முயற்சியானது மனிதர்களுக்கு மட்டுமன்றி வனவிலங்குகளுக்கும் பாரிய அளவில் நன்மை பயக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. Orient Finance PLC இன் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியான திரு. கே. எம். எம் ஜபீர் இம்முன்னெடுப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், 'சுற்றுச்சூழல் மீது அக்கறையுள்ள ஓர் நிறுவனம் என்ற வகையில் வில்பத்து காடுகளைச் சுற்றியுள்ள வனப்பிரதேசத்தை மறுசீரமைக்கும் முயற்சிகளில் இணைவதில் நாம் பெருமை கொள்கின்றோம். இயற்கையின் சமநிலையற்ற தன்மைக்கு நமது மனித பங்களிப்பை ஏற்றுக்கொண்டு முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வதானது எமது பொறுப்பாகும். அவ்வாறு சுற்றுச்சூழலில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்குவதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.' எனத் தெரிவித்தார்.

# ராஜா ஜூவலர்ஸின் மறக்க முடியாத வைர தினம்



இலங்கையின் தங்க உலகின் முடிசூடா மன்னனாக திகழும் ராஜா ஜூவலர்ஸ், மறக்க முடியாத வைர தின கொண்டாட்டத்தை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த கண்கவர் நிகழ்வு வைர நகைகளின் காலத்தால் அழியாத கவர்ச்சியை மையமாகக் கொண்டதாக, நேர்த்தி மற்றும் புத்திசாலித்தனத்தின் சாராம்சத்தை வெளிப்படுத்தியது. "Diamond Forever" (எப்போதும வைரம்) எனும் கருப்பொருளுடன், இடம்பெற்ற இந்நிழ்வில் 50% வரை ஒப்பிட முடியாத தள்ளுபடிகள் வழங்கப்பட்டன. இது அவர்களின் அன்பான வாடிக்கையாளர்களுக்கு நீடித்து நிலைக்கும் கவர்ச்சியான வைரங்களை கொள்வனவு செய்ய தூண்டியது. ராஜா ஜூவலர்ஸின் அழகுக்கான அர்ப்பணிப்பானது நகைகளைத் தாண்டியும் பரந்து செல்கின்றது. இங்கு ஒவ்வொரு கொள்வனவிற்கும், முதன்மையான அழகுசாதன வர்த்தகநாமங்களின் பெறுமதிமிக்க வவுச்சர்கள் வழங்கப்பட்டதோடு, இது அவர்களின் மதிப்புமிக்க கொள்வனவின் பாராட்டுக்கான அடையாளமாக இருந்தது. இங்கு அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கூடாரமானது புகைப்படங்களை மாத்திரமல்லாது, அன்பான நினைவுகளையும் ஏற்படுத்த உதவியது. அத்துடன் அவர்களது 0% வட்டி கொண்ட, மாதாந்த தவணைத் திட்டங்கள் இந்த நேர்த்தியான நகைகளை சொந்தமாக்குவதற்கான கனவுகளை அடைவதை உறுதி செய்தன.

# வசீகரத் தன்மையினை மென்மேலும் உயர்த்தும் Prima KottuMee




முதன்மை நுகர்வோர் வர்த்தகநாமங்களில் ஒன்றான Prima KottuMee, அதன் சமீபத்திய புதிய தயாரிப்பின் அறிமுகத்தின் மூலம் அதன் கவர்ந்திழுக்கும் தன்மையினை புதிய உயரத்திற்கு கொண்டு சென்றுள்ளது. மிகவும் விரும்பப்படும் வர்த்தக நாமம் Prima KottuMee, வாழ்க்கைக்கு சுவாரஸ்யம் சேர்க்கும் வகையில், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல நுகர்வோரை மகிழ்வித்து, அதன் Hot & Spicy பயணத்தினை கொண்டாடி மகிழ்ந்தது.

கொழும்பில் உள்ள சினமன் கிரான்ட் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த அறிமுக நிகழ்வில் நிறுவனத்தின் முகாமைத்துவம், உள்ளக குழு உறுப்பினர்கள், வர்த்தகநாம தூதர்கள், யொஹானி மற்றும் அஷான்யா மற்றும் தொடர்பாடல் பங்காளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். "Prima KottuMee இன் 'Hot N' Spicy" மரபை பற்றி சிந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்தப் பயணமானது தனித்துவம்மிக்கது. அசல் 'Hot N' Spicy சுவையினை விரும்பும் நுகர்வோரை பெரிதும் கவர்ந்துள்ளது. நாம் தொடர்ந்தும் புதுமுறையிலான தயாரிப்புகளை வழங்குவதும் நுகர்வோருடன் எப்போதும் இணைந்திருப்பதுமே எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னதமான Prima KottuMee அனுபவத்தை வழங்கிட எப்போதும் துணைபுரின்றன என நாங்கள் நம்புகிறோம்" என்று இலங்கையின் Pசிஅய குழுமத்தின் சிலோன் அக்றோ இன்டஸ்ட்ரீஸ்(பிரைவட்) லிமிட்டெட் இன் பொது முகாமையாளர் சஜித் குணரத்ன தெரிவித்தார்.

# UNSCR 1325 தொடர்பான தேசிய வேலைத்திட்டம், சிறுவர் மீது ஆயுத மோதல்களின் தாக்கம்



ஆயுத மோதலில் சிறுவர்களுக்கான பல்கலைக்கழக வலையமைப்பு மற்றும் அரசியல் ஆய்வுகள் நிறுவனம் இத்தாலிய வெளிவிவகாரங்கள் அமைச்சு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பின் துணையுடன், UNSCR1325 தொடர்பான தேசிய வேலைத்திட்டங்கள் மற்றும் சிறுவர் மீது ஆயுத மோதல்களின் தாக்கம்: சர்வதேச பல்கலைக்கழக வலையமைப்பின் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு' என்ற தொனிப்பொருளில் இவ்வேலைத்திட்டத்தின் கட்டமைப்பிற்குள் மாநாடொன்றை ஏற்பாடு செய்துள்ளது. ஆயுத மோதல் சூழ்நிலைகளால் ஏற்படுகின்ற சிறுவர்களுக்கு எதிரான கடுமையான வன்முற மீறல்கள் பற்றிய புவியியல் பிரதேசத்தின் அடிப்படையில் தர மற்றும் அளவுசார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வது மற்றும் ஒரு நுண்ணறிவு அறிக்கையை தயாரிப்பதை இந்த திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆயுத மோதலால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மோதலுக்குப் பிந்தைய சீர்திருத்தம், புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருங்கிணைப்பு பற்றிய மதிப்புமிக்க பகுப்பாய்வையும் இந்த ஆராய்ச்சி முன்னெடுப்பதுடன், UNSCR1325 முக்கிய பங்காற்றக்கூடிய ஒரு காத்திரமான வழிமுறையாகும்.

இந்த செயல் திட்டத்தில் இரண்டு இத்தாலிய புகைப்பட நிருபர்களான மர்சியா ஃபெரோன் மற்றும் விட்டோரியோ அலோன்சோ ஆகியோரின் காணொளிகள் மற்றும் புகைப்பட கண்காட்சி ஆகியவை அடங்குவதுடன், இது ஆயுத மோதல்கள் மற்றும் மோதலுக்கு பிந்தைய காலத்தில் வாழும் சிறுவர்களின் நிலைமையைப் பிரதிபலிக்கின்றன.

இந்த மாநாடு தீர்மானம் 1325 இன் படி இத்தாலிய செயல் திட்டத்திற்கு எதிராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிய நாடுகளின் NAP இன் ஒப்பீட்டு பகுப்பாய்வை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

# மின்சார Mercedes-Benz EQ வாகனங்கள் மூலம் நிலைபேறான போக்குவரத்திற்கு வழி ஏற்படுத்தும் DIMO



இலங்கையில் MercedesBenz இன் ஒரே அங்கீகரிக்கப்பட்ட பொது விநியோகஸ்தரும், பல்வகைத் துறை கூட்டு நிறுவனமுமான DIMO ஆனது, உள்ளூர் சந்தையில் MercedesBenz EQ மின்சார வாகன வகைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், நிலைபேறான போக்குவரத்தை நோக்கிய ஒரு முக்கிய முன்னேற்ற பாதையை ஏற்படுத்தியுள்ளது.

DIMO வழங்கும் மின்சார MercedesBenz EQ வகைகளில், MercedesBenz EQA, EQB, EQE, EQE SUV, EQS & EQS SUV ஆகியவற்றின் ஈர்க்கக்கூடிய வரிசை உள்ளடங்கியுள்ளது. இதன் மூலம் பல்வேறு மட்டத்திலான வாடிக்கையாளர்களுக்கு நிறுவனம் சேவையை வழங்குகிறது.

MercedesBenz EQ வாகனங்களின் மின்சார வகையின் புதிய நுழைவு நிலை வகையின் பெயரே EQA ஆகும். அதன் SUV உடலின் மாறுபடும் வடிவமைப்பானது, அதில் பயணிக்கும் சாரதிக்கு உச்ச மகிழ்ச்சியை தரும் அம்சமாக காணப்படுகின்றது. MercedesBenz EQA ஆனது, வாகனத்தின் அனைத்து உற்சாகமூட்டும் பண்புகளையும் கொண்டுள்ளதோடு, வாகனத்தை செலுத்த ஒரு திறனான மின்சார powertrain இணைக்கப்பட்டுள்ளது. 140kW மின்வலுவைக் கொண்ட EQA ஆனது, 450 கிலோ மீற்றர் வரை பயணிக்கக் கூடியதாகும்.

EQB ஆனது MercedesEQ வின் முற்போக்கான சொகுசுத் தன்மை கொண்ட, சிறப்பம்சமான SUV அம்சங்களைக் கொண்டுள்ளது. 140kW மின்வலுவைக் கொண்ட EQB ஆனது, 450 கிலோ மீற்றர் வரை பயணிக்கக் கூடியதாகும். பெரிய வாகனங்களுக்கான (EVA2) மின்சார கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட மற்றொரு மாதிரி வகையான EQE business saloon ஆனது, விளையாட்டு நோக்க வடிவமைப்பை வெளிப்படுத்துகிறது. 215kW மின்வலு கொண்ட EQE ஆனது, 650 கிலோ மீற்றர் வரை பயணிக்கக் கூடியதாகும். EQE 4MATIC SUV ஆனது, EQE executive sedan இன் பல்வேறு அம்சங்கள் கொண்ட வகையாகும். 215kW மின்வலு கொண்ட EQE SUV ஆனது, 500 கிலோ மீற்றர் வரை பயணிக்கக் கூடியதாகும்.

# முதல்முறை எல்.பி.எல் இறுதிக்கு தகுதி பெற்றது தம்புள்ளை அவுரா

## நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் வெளியேற்றம்




லங்கா பிரீமியர் லீக் தொடரில் இறுதிப் போட்டியில் தம்புள்ளை அவுரா அணி முதல்முறை தகுதி பெற்றதோடு இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கான இரண்டாவது தகுதிச் சுற்றுப் போட்டியில் பி லவ் கண்டி மற்றும் காலி டைட்டன்ஸ் அணிகள் இன்று (19) பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

எல்.பி.எல் தொடரின் இறுதிச் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் (17) ஆரம்பமான நிலையில் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கான முதலாவது தகுதிச் சுற்றுப் போட்டியில் காலி டைட்டன்ஸ் அணியை எதிர்கொண்ட தம்புள்ளை அவுரா 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட காலி டைட்டன்ஸ் அணி 20 ஓவர்களுக்கும் சகல விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீரர் லசித் குரூஸ்புள்ளே 61 பந்துகளுக்கு 80 ஓட்டங்களை பெற்றபோதும் வேறு எவரும் 20 ஓட்டங்களை கூட எட்டவில்லை.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய தம்புள்ளை அவுரா அணிக்காக ஆரம்ப வீரர் குசல் மெண்டிஸ் (45 பந்துகளில் 49) மற்றும் குசல் பெரேரா (39 பந்துகளில் 53) சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். அதன் மூலம் அந்த அணி 19.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 147 ஓட்டங்களை எட்டியது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது தகுதிச் சுற்றுப் போட்டிக்கு தெரிவாவதற்கான இறுதிச் சுற்றுப் போட்டியில் பி லவ் கண்டி அணி நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணியை 61 ஓட்டங்களால் வீழ்த்தியது. இதன்மூலம் ஜப்னா கிங்ஸ் தொடரில் இருந்து வெளியேறியது.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பி லவ் கண்டி அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீரர் மொஹமட் ஹரிஸ் 49 பந்துகளில் 79 ஓட்டங்களை விளாசினார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஜப்னா கிங்ஸ் அணியை கண்டி அணித் தலைவர் வனிந்து ஹசரங்க திக்குமுக்காடச் செய்தார். ஹசரங்க ஆறு விக்கெட்டுகளை வீழ்த்த ஜப்னா கிங்ஸ் 127 ஓட்டங்களுக்கே சுருண்டது.

லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டி நாளை (20) கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

---

தேசிய விளையாட்டு விழா:

# மெய்வல்லுனர் போட்டிகள் ஓகஸ்ட் 24 அன்று ஆரம்பம்




விளையாட்டுத்துறை அமைச்சும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களமும் ஏற்பாடு செய்துள்ள வருடத்தின் மிகப் பெரிய விளையாட்டு விழாவான 47ஆவது தேசிய விளையாட்டு பெருவிழாவின் இறுதி நிகழ்வான மெய்வல்லுனர் போட்டிகள் இம்மாதம் 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இம்முறை தேசிய விளையாட்டு விழா மெய்வல்லுனர் போட்டிகளுக்காக வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலிருந்து சுமார் ஆயிரத்துக்கும் அதிக வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து 3 நாட்களுக்கு நடைபெறவுள்ள மெய்வல்லுனர் போட்டிகளில் தகுதிச்சுற்று, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி என 60 போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன், வருடத்தின் அதி சிறந்த வீரர் மற்றும் சிறந்த வீராங்கனைக்கான விருதுகள் மற்றும் சம்பியன் அணிக்கான விருதினை இறுதிநாள் நிகழ்வுகளின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஆசிய விளையாட்டு விழா அடுத்த மாதம் சீனாவில் நடைபெறவுள்ளதால், இம்முறை தேசிய விளையாட்டு விழா மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கையின் முன்னணி மெய்வல்லுனர்கள் பங்கேற்பது சந்தேகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இம்முறை தேசிய விளையாட்டு விழாவின் ஆரம்ப நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்துகொள்ளவுள்ளதுடன், இறுதி நாள் நிகழ்வின் பிரதம விருந்தினராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக கடந்த 2019ஆம் ஆண்டுக்குப் பின் தேசிய விளையாட்டு விழா முழுமையாக நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

# பாடசாலை கால்பந்து தொடர்: தாருஸ்ஸலாம் கல்லூரி தகுதி



**ரூஸைக் பாரூக்**

கொழும்பு மாளிகாவத்தை தாருஸ்ஸலாம் கல்லூரி முதன்முறையாக 20 வயதுக்குட்பட்ட பாடசாலை கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்தத் தொடர் கல்வி அமைச்சு மற்றும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாடில் நடைப்பெறுகிறது.

இதில் தாருஸ்ஸலாம் கல்லூரி இன்று (19) புனித ஜோசப் கல்லூரியையும், எதிர்வரும் 23ஆம் திகதி கிங்ஸ்வூட் கல்லூரியையும் மொரகஸ்முல்ல ஜனக ரணவக்க மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு சந்திக்கவுள்ளது.

மேலும் 29ஆம் திகதி டி மஸெனோட் கல்லூரியை டி மஸெனோட் கல்லூரி மைதானத்திலும் செப்டெம்பர் 6ஆம் திகதி ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரியை மொரகஸ்முல்ல ஜனக ரணவக்க மைதானத்திலும் சந்திக்கவுள்ளது.

---

# கிழக்கு மாகாண எறிபந்து: மட்டு. மத்தி முன்னிலை

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மத்திய வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து போட்டி கடந்த வாரம் ஏறாவூர் டொக்டர் அஹமட் பரீட் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 63 பாடசாலைகள் பங்கேற்ற எறிபந்து போட்டியில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஏறாவூர் மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலையும், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையும், 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் ஏறாவூர் அல் அஸ்ஹர் பெண்கள் உயர் கல்லூரியும், 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கார்மல் பற்றிமா தேசிய கல்லூரியும் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் தேசிய மட்ட போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பினையும் பெற்றுள்ளன.

---

# ஸாஹிரா–அலிகார் மத்தி உதைபந்து சமர் இன்று





**எஸ்.எம். அறூஸ்**

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடாத்தும் அகில இலங்கை ரீதியிலான 20 வயதுக்குட்பட்ட முதலாம் பிரிவு பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பி குழுவில் இடம்பெறும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி நாளை (19) மாலை 3.30 மணிக்கு மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. பி குழுவில் இடம்பெறும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக்கு இது இரண்டாவது போட்டியாகவும், ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரிக்கு இது முதலாவது போட்டியாகவும் அமையவுள்ளது.

இச்சுற்றுத் தொடரில் மொத்தமாக 20 பாடசாலை அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் ஏறாவூர் அலிகார் மத்திய கல்லூரி முதல் முறையே தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# ஆசிய கிண்ணம்: இந்திய–பாகிஸ்தான் போட்டி டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்தன




## உச்ச டிக்கெட்டின் விலை 96,600 ரூபா

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான டிக்கெட் விற்பனை போட்டியை நடத்தும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் நேற்று முன்தினம் (17) ஆரம்பிக்கப்பட்டது.

இதில் வரும் செப்டெம்பர் 02 ஆம் திகதி பல்லேகலவில் நடைபெறவுள்ள இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டிக்கான டிக்கெட் அதிக விலை கொண்டதாக உள்ளதோடு அதில் ஏ மற்றும் பி ஆகிய உயர் நிலை டிக்கெட் ஒன்றின் விலை 300 அமெரிக்க டொலராக உள்ளது. இதன் இலங்கை நாணய மதிப்பு 96,600 ரூபாவாக உள்ளது.

அதேபோன்று குறைந்த விலை கொண்ட டிக்கெட் மைதானத்தின் இரு பக்கங்களில் இருக்கும் புல் தரை பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதோடு, அது 30 அமெரிக்க டொலர் ஆகிய 9,660 இலங்கை ரூபா மதிப்பாகும்.

எவ்வாறாயினும் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் பி.ப. 7.00 மணிக்கு இந்திய – பாகிஸ்தான் போட்டியின் நுழைவுச் சீட்டு இணையதளத்தில் விடப்பட்டு ஒரு மணி நேரம் கடப்பதற்கு முன்னரே மைதானத்தின் பிரதான பார்வையாளர் அரங்கின் அனைத்து டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்துள்ளன. வியாழக்கிழமை (17) இரவு 10.00 மணியாகும்போது புல்தரை பகுதியில் டிக்கட்டுகள் சிலவே எஞ்சியிருந்தன.

பல்லேகல மைதானத்தில் சராசரியாக பார்வையாளர் எண்ணிக்கை 35,000 அளவு என்பதோடு அதன் இரு மேல்மாடிகளிலும் 2,000க்கும் அதிகமான இருக்கைகள் உள்ளன. அதேபோன்று அதன் கீழ் பகுதியில் 5,000 பேருக்கு அமர முடியும் என்பதோடு புல் தரை பகுதியில் சாதாரணமாக 8,000 பேர் என 16,000 பேருக்கு இருக்க முடியும்.

இதில் இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெறும் இலங்கை மற்றும் பங்களாதேஷ் போட்டியின் டிக்கெட்டுகளும் நேற்றுமுன்தினம் நண்பகல் 13.30 க்கு இணையதளத்தில் விடுவிக்கப்பட்ட நிலையில் அந்தப் போட்டியினதும் புல்தரை பகுதியின் டிக்கெட்டுகள் சில மாத்திரமே ஏஞ்சி இருந்தன.

மற்ற பிரதான அரங்குகள் அனைத்தினதும் டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துள்ளன.

இந்த போட்டியில் மேல் மாடி நுழைவுச் சீட்டின் விலை 35 அமெரிக்க டொலர் அல்லது 11,270 ரூபாவாகவும், மைதானத்தில் இரு பக்கத்தில் உள்ள புல் தரை பகுதி 5 அமெரிக்க டொலராகவும் (1,610 ரூபா) இருந்தது.

---

# திரிமான்னவின் ஓய்வினை ஏற்றது இலங்கை கிரிக்கெட்



அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறும் லஹிரு திரிமான்னவின் முடிவை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்றுள்ளது.

லஹிரு திரிமான்னவின் விலகலை நிறைவேற்றுக் குழு ஏற்றதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து திரிமான்ன அனுப்பிய கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'திரிமான்னவின் சிறந்த எதிர்காலத்திற்கு வாழ்த்துகளை தெரிவிப்பதற்கு இதனை சந்தர்ப்பமாக எடுத்துக்கொள்வதோடு இலங்கையின் அனைத்து வகை கிரிக்கெட்டுக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு நினைவில் கொள்ளப்படும்' என்று இலங்கை கிரிக்கெட் சபை தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

லஹிரு திரிமான்ன இலங்கை அணிக்காக 44 டெஸ்ட், 127 ஒருநாள் மற்றும் 26 டி20 போட்டிகளில் 5500க்கும் மேற்பட்ட சர்வதேச ஓட்டங்களை பெற்றுள்ளார்.

---

# இலங்கை வந்தது பாகிஸ்தான் அணி

**கட்டுநாயக்க டீ.கே.பீ. கபில**



இலங்கையில் நடைபெறவுள்ள ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணி கடந்த வியாழக்கிழமை (17) இலங்கையை வந்தடைந்தது.

ஆப்கானிஸ்தானில் நடத்த வேண்டிய கிரிக்கெட் தொடரே இலங்கைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணி வீரர்கள், பயிற்சியாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் முகாமையாளர்கள் என 21 பேர் கொண்ட குழுவே கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தது.

பாக். அணியினர் வியாழக்கிழமை மாலை 4.25 மணிக்கு பாகிஸ்தானின் லாகூர் நகரில் இருந்து ஸ்ரீலங்கன் விமானசேவையின் யூ.எல். 154 விமானத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் நேராக ஆப்கானிஸ்தான் தொடர் நடைபெறும் ஹம்பாந்தோட்டை நகரை நோக்கி பயணித்துள்ளனர். இதில் ஏற்கனவே லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்று இலங்கையில் இருக்கும் பாக். அணித் தலைவர் பாபர் அசாம் உட்பட பாகிஸ்தான் அணி வீரர்கள் இந்த அணியுடன் இணையவுள்ளனர்.

ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் இரு ஒருநாள் போட்டிகளும் எதிர்வரும் ஓகஸ்ட் 22 மற்றும் 24 ஆம் திகதிகளில் ஹம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்தில் நடைபெறவுள்ளதோடு மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்பதற்காக ஆப்கானிஸ்தான் அணி ஏற்கனவே இலங்கை வந்துள்ளது.